# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ORIGINAL
# IDEAL
Published since 1978 with Repute

# 11

# பொதுத்தமிழ்

## 10 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்

- கங்கா -வின் மாதிரி வினாத்தாள்கள்
- அனைத்து 1 - 30 வினாக்களுக்கான விடைகள்


**SRI GANGA PUBLICATIONS®**
(A UNIT OF **SHYAMALA** GROUP)

**Corporate Office :**
No. 1, Sugar Mill Colony,
Salai Kumaran illam,
Madurai Road,
**Tirunelveli - 627001.**
Phone : 0462 - 233 8899 / 233 8484
Mobile : 94431 58484 / 95978 39822
Email : suryaguides@yahoo.com

**Registered Office :**
New No. 59, 4th Avenue,
Opp. to Govt. Boys Hr. Sec. School,
Ashok Nagar,
**Chennai - 600 083.**
Phone : 044 - 2474 4484
Mobile : 94421 58484 / 94425 58484
Email : srigangapublications5@gmail.com

**Website : www.suryapublications.in**

**Price : ₹ 50/-**


Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ORIGINAL IDEAL

Published since 1978 with Repute

# OUR BANK DETAILS

## TIRUNELVELI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **446971431** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000T034** |
| Branch Name | : | **TIRUNELVELI JUNCTION** |

| | | |
|---|---|---|
| Account Name | : | **SURYA PUBLICATIONS** |
| Account Number | : | **510909010051752** |
| Bank Name | : | **CITY UNION BANK** |
| IFSC Code | : | **CIUB0000230** |
| Branch Name | : | **PALAYAMKOTTAI** |

## CHENNAI ACCOUNT

| | | |
|---|---|---|
| Account Name | : | **SRI GANGA PUBLICATION** |
| Account Number | : | **928507483** |
| Bank Name | : | **INDIAN BANK** |
| IFSC Code | : | **IDIB000A031** |
| Branch Name | : | **ASHOK NAGAR** |

| | | |
|---|---|---|
| Account Name | : | **SRI GANGA PUBLICATION** |
| Account Number | : | **512020010022514** |
| Bank Name | : | **CITY UNION BANK** |
| IFSC Code | : | **CIUB0000230** |
| Branch Name | : | **PALAYAMKOTTAI** |

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 11 ஆம் வகுப்பு

## மாதிரி வினாத்தாள் - 1

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்

இ) முருகன் ஈ) பாரதியார்

**2. 'உணவே மருந்து' என்னும் கருத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்கவும்.**

அ) மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு

ஆ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

ஈ) நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**3. யாரோ உனைப்போல் அனுதினம் உழைப்போர்? - இது எவர் மொழி?**

அ) நடராசன் ஆ) புல்

இ) வாய்க்கால் ஈ) நாங்கூழ்

**4. கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லை முதலிய பொருள்களைத் தரும் சொல்:**

அ) மரை ஆ) திரை

இ) வரை ஈ) உரை

**5. கூற்று - 1 : தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவிங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.**

**கூற்று - 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சேர்ந்தவை.**

அ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

ஆ) கூற்றுகள் இரண்டும் சரி

இ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஈ) கூற்றுகள் இரண்டும் தவறு

**6. பொருத்தமான தொடரைத் தேர்ந்தெடுக்கவும்:**

அ) மல்லார்மே-ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சாங்கர் ஜெயராமன்

ஆ) வால்ட் விட்மன்-பிரெஞ்சு மொழியிலிருந்து : வெ.ஸ்ரீராம்

இ) பாப்லோ நெரூடா-ஆங்கிலத்திலிருந்து தமிழில் : இந்திரன்

ஈ) மனோரமா பிஸ்வாஸ்-ஒரிய மொழியிலிருந்து தமிழில் : இந்திரன்

**7. 'தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' என்னும் விதிப்படி அமைந்த சொல்:**

அ) வில்லொடிந்தது ஆ) திரைப்படம்

இ) பூஞ்சோலை ஈ) வயிற்றுப்பசி

**8. ஆசிரியப்பாவிற்கு உரிய சீர்:**

அ) வெண்சீர் ஆ) கனிச்சீர்

இ) ஆசிரிய உரிச்சீர் ஈ) வஞ்சியுரிச்சீர்

**9. பொருந்தாததைக் கண்டறிக.**

அ) யானை டாக்டர் - டாக்டர் ஜெயமோகன்

ஆ) செவ்வி - நர்த்தகி நடராஜ்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இ) பிம்பம் - பிரபஞ்சன்

ஈ) வாடிவாசல் - அ.முத்துலிங்கம்

10. **'அறிவும் ஒழுக்கமும்' - என்பதன் இலக்கணக் குறிப்பு:**

அ) உவமை ஆ) எண்ணும்மை

இ) பெயரெச்சம் ஈ) உம்மைத்தொகை

11. **Document - என்பதன் தமிழ்ச் சொல்லை தேர்ந்தெடுக்கவும்:**

அ) ஒப்பந்தம் ஆ) சட்டம்

இ) ஆவணம் ஈ) கோப்பு

12. **'கொள்' என்னும் வேர்ச் சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்கவும்:**

அ) கொள்ளும் ஆ) கொள்வோன்

இ) கொள்க ஈ) கொள்ளுதல்

13. **ஈரொற்று மெய்ம்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல்:**

அ) கப்பல் ஆ) மகிழ்ச்சி

இ) பட்டம் ஈ) மார்கழி

14. **சரியான நிறுத்தக் குறியுடைய சொற்றொடரைக் கண்டுபிடிக்கவும்.**

அ) குறமகள் காக்கும் ஏனல் புறமும் தருதியோ? வாழிய, மழையே!

ஆ) 'குறமகள் காக்கும்' ஏனல் புறமும் தருதியோ வாழிய! மழையே

இ) குறமகள் காக்கும் 'ஏனல் புறமும்' தருதியோ? வாழிய! மழையே!

ஈ) 'குறமகள் காக்கும் ஏனல் புறமும்' தருதியோ வாழிய, மழையே

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. "ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்"
- இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?

17. பாயிரம் பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?

18. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களுள் நான்கினைக் குறிப்பிடுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. ஐந்து விவசாய மந்திரங்கள் எவை?

20. இந்திய கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

21. நாட்டுப்புறத்திலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

(அ) அழைத்தான் (ஆ) மலிந்த

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

(அ) திருவடி (ஆ) கருங்கடல்

**24. மரபுப்பிழையை நீக்கி எழுதுக.**

களி மயில் கூவும்; புள்ளிக்
கருங் குயில் பேசும்.

**25. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.**

(அ) ?/ (ஆ) 

**26. விகுதியைக் கொண்டு ஆக்கப் பெயரைக் கண்டறிக.**

அ) அறிவைத் தேடிப்போகுமிடம் உலகம் அறிய
உதவுமிடம் (அகம்) .................

ஆ) வந்தால் மகிழ்ச்சி இது உழைத்தால் கிடைக்கும்
இது (மானம்) .................

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**27. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.**

அ) தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாகக் கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி.

ஆ) நீலகேசி என்பது ஐஞ்சிறுங் காப்பியங்களுள் ஒன்று.

**28. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.**

அ) புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களை கொண்டது.

ஆ) எண் வகை சித்திகளை கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள்.

**29. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்.**

கனை, கணை

30. கலைச் சொல்லாக்கம் – பொருள் தருக.

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31. ‘உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்’
– இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

33. மனோன்மணீயம் – குறிப்பு வரைக.

34. மகள் நிலை உரைத்தல் என்னும் ‘மனைமருட்சி’ துறையைச் சான்றுடன் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. ‘மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது’ – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீவிர் அறிந்த செய்திகளை விளக்குக.

37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



38. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' - பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்பு படுத்தி எழுதுக.

40. தமிழாக்கம் தருக.
(அ) Culture does not make people. People make culture.
(ஆ) In nature, light creates the Colour. In the Picture, Colour creates the light.
(இ) Nobody can hurt me without my permission.
(ஈ) Work while you work and play while you play.

41. உருவக அணி அல்லது பிறிது மொழிதல் அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

42. **கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்துத் தொடரும் வினாக்களுக்கு விடை தருக.**

நகராட்சிப் பள்ளி ஆசிரியராக நெடுங்காலம் பணியாற்றிய அவர் தன்னுணர்வால், உறுதியான உழைப்பால், தமிழ்ப் பற்றால் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் மதித்துப் போற்றும் பணிகளைச் செய்தார். ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். சிறந்த வரலாற்று ஆசிரியர், நடுநிலை பிறழாத ஆய்வாளர், மொழியியல் அறிஞர், இலக்கியத் திறனாய்வாளர் என்றெல்லாம் போற்றப்பட்ட பன்முகச் சிறப்புக் கொண்டவர். அவருக்கு மதுரைப் பல்கலைக்கழகம் 1980 - ஆம் ஆண்டு, 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டமளித்துப் பாராட்டியது. கிறித்துவமும் தமிழும், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும், மறைந்து போன தமிழ் நூல்கள் போன்ற பல நூல்களால் தமிழ் ஆய்வு வரலாற்றில் மயிலை. சீனி. வேங்கடசாமி அழியாச் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

**வினாக்கள்:**
(அ) மயிலை சீனி வேங்கடசாமியின் பன்முகச் சிறப்புகள் யாவை?
(ஆ) பத்தியில் இயைபு நயம் பொருந்திய சொற்களை எடுத்து எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



(இ) அழியாச் சிறப்பிடம் - இலக்கணக் குறிப்புத் தருக.

(ஈ) நகராட்சிப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர் - அவர் யார்?

43. 'கடல்' அல்லது 'மலை' என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) பாதசாரிகளின் வழிநடைப் பாடல் காவடிச் சிந்து என்பதை அண்ணாமலையாரின் பாடல் வழி நிறுவுக.

**(அல்லது)**

ஆ) மதீனா நகரின் வளத்தினை உமறுப்புலவர் எங்ஙனம் வருணிக்கிறார்?

45. அ) தலைமைச் செயலகம் பாடம் வாயிலாக நீவிர் அறியும் அறிவியல் கருத்துகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

46. அ) இதழாளர் பாரதி குறித்து நீவிர் அறிவன யாவை?

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழர் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப் பகுதி கொண்டு விளக்குக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) 'உண்டால் அம்ம' - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

ஆ) 'இடத்து' என முடியும் குறள்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. ஆ) அண்ணாமலையார்
2. ஆ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்.
3. அ) நடராசன்
4. இ) வரை
5. ஆ) கூற்றுகள் இரண்டும் சரி
6. ஈ) மனோரமா பிஸ்வாஸ்–ஒரிய மொழியிலிருந்து தமிழில் : இந்திரன்
7. அ) வில்லொடிந்தது
8. இ) ஆசிரிய உரிச்சீர்
9. ஈ) வாடிவாசல் - அ. முத்துலிங்கம்
10. ஆ) எண்ணும்மை
11. இ) ஆவணம்
12. ஆ) கொள்வோன்
13. ஆ) மகிழ்ச்சி
14. அ) குறமகள் காக்கும் ஏனல் புறமும் தருதியோ? வாழிய, மழையே!

### பகுதி - II

15. “புகழ் எனின் உயிருங்கொடுக்குவர்”
    - தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்.
    - உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார்.
16. நூல் – நற்றிணை, ஆசிரியர் – போதனார்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரம்.

18. சிலம்பு, தண்டை, பாடகம், காலாழி.

19. 
- உழப்படாத நிலம்,
- இரசாயன உரம் இல்லாத உற்பத்தி,
- பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயர்ப் பாதுகாப்பு.
- தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி.
- ஒட்டுவிதை இல்லாமல் உயர்விளைச்சல்.

20. நாகரம், வேசரம், திராவிடம்.

21. நாட்டுப்புறத்தில் மாபெரும் இயற்கையே எங்கும் சிறந்து விளங்குகிறது. பட்டணத்தில் மனித சமுதாயம் மிகவும் முக்கியமானது.

22. அ) அழைத்தான் = அழை + த் + த் + ஆன்

அழை - பகுதி; த் - சந்தி; த் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

ஆ) மலிந்த = மலி + த் (ந்) + த் + அ

மலி - பகுதி; த் - சந்தி (ந் ஆனது விகாரம்);
த் - இறந்தகால இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி

23. அ) திருவடி = திரு + அடி

திரு + அடி - ஈ, இ, ஐ வழி யவ்வும், ஏனை உயிர் வழி வவ்வும்

திரு + வ் + அடி - உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

ஆ) கருங்கடல் = கருமை + கடல்

- ஈறுபோதல் எனும் விதிப்படி ‘மை’ விகுதி கெட்டு கரு+கடல் என்றானது.
- இனமிகல் எனும் விதிப்படி ‘கருங்கடல்’ எனப் புணர்ந்தது.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



24. களி மயில் அகவும்; புள்ளிக்
கருங் குயில் கூவும்

25. அ) வினாக்குறி அடையாளம் இடவும்.

ஆ) ஒற்றை மேற்கோள் குறியீடு இடவும்.

26. அ) நூலகம் ஆ) வருமானம்

27. அ) தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாக கருத்துப்படங்களை அறிமுகப்படுத்தியவர் யார்?

ஆ) நீலகேசி எக்காப்பியங்களுள் ஒன்று?

28. அ) புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.

ஆ) எண் வகைச் சித்திகளைக் கைவரப் பெற்றவர்கள் சித்தர்கள்.

29. அ) கனை - குதிரை எழுப்பும் குரல்

ஆ) கணை - அம்பு

30. பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள்ள சொற்களை அடையாளம் காட்டியும் தேவையானவிடத்துப் புதிய சொற்களை உருவாக்கித் தருவதே கலைச் சொல்லாக்கம் ஆகும்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 2

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பொருத்தமான இலக்கிய வடிவம் எது?**

அ) ஏதிலிக் குருவிகள் – மரபுக் கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை

இ) யானை டாக்டர் – குறும்புதினம்

ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை

**2. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்**

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை

இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

**3. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார் யாரிடம் கூறியது?**

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

**4. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்துமொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து**

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது - இவ்வரிகள் உணர்த்தும் கருத்து**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்

ஆ) பேச்சுமொழி, எழுத்துமொழியை திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை

இ) எழுத்துமொழியை விட, பேச்சுமொழி எளிமையானது.

ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

5. **கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை**

**அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள்**

**ஆ) நேரடிப்பொருள்கள்**

i) அ - மட்டும் சரி ii) ஆ - மட்டும் சரி

iii) இரண்டும் சரி iv) அ- தவறு, ஆ-சரி

6. **தாகூர் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவிய ஆண்டு**

அ) 1920 ஆ) 1921

இ) 1922 ஈ) 1923

7. **ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.**

அ) காவலாளி ஆ) மேலாளர்

இ) உதவியாள் ஈ) ஆசிரியர்

8. **Plastic - என்பதன் தமிழ்ச்சொல்**

அ) ஆளுமை ஆ) உணர்ச்சி

இ) நெகிழி ஈ) மின் நகர்வு

9. **இனிதென - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**10. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு**

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி

ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை

ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

**11. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.**

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.

ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.

இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**12. புதிய பத்தி தொடங்குக என்பதற்கான குறியீடு**

அ) 

ஆ) 

இ) Dt

ஈ) 

**13. பஞ்சமுகி என்ற கர்நாடகச் செவ்வியல் இராகத்தை உருவாக்கியவர்**

அ) எம்.எஸ்.விசுவநாதம் ஆ) கங்கை அமரன்

இ) இளையராஜா ஈ) பரத்வாஜ்

**14. ஒட்டுப் போடாத**
**ஆகாயம் போல - இந்த**
**உலகமும் ஒன்றேதான் . . . - இக்கவிதையில் பயின்று வருவது**

அ) உவமை ஆ) உருவகம்

இ) உள்ளுறை ஈ) இறைச்சி

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. சீர்தூக்கி ஆராய வேண்டிய செயல்கள் யாவை ?

17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

18. அப்துல் ரகுமானின் படைப்புகளைக் கூறுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

20. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21. தாமஸிகம் அல்லது மெடீரியலிஸம் - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

**22. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

**23. உயிரெழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?**

**24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

குமரனை பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள் என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

**25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க (ஒன்று மட்டும்).**

அ) தங்கை ஆ) அறிவில்லாதவன்

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) கடந்து ஆ) வருகின்ற

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Ethic Group ஆ) Cultural Elements

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
உலை, உளை, உழை

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) தண்டுடை ஆ) காற்றிலாடும்

**30.** ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகுதி - III**

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.

33. திருவாசகம்- குறிப்பு வரைக.

34. இன்குலாப், "உலகுக்கு வேண்டும் நானும் ஓர் துளியாய்" எனக் கூறுவதன் நயத்தை விளக்குக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

36. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

37. கோவில் என்பது வெறும் வழிபடும் தலம் மட்டுமன்று - விளக்கம் தருக.

38. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. "சிறுதுரும்பும் பல்குத்த உதவும்"என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. **தமிழாக்கம் செய்க.**

1. Just living is not enough. One must have sunshine, freedom and a little flowers. – Hans Anderson
2. In nature, light creates the colour. In the picture, colour creates the light – Hans Hofmann.
3. Look deep into nature and then you will understand everything better – Albert Einstein
4. Simplicity is nature's first step, and the last of art – Philip James Bailey.

41. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)

சொற்பொருள் பின்வருநிலையணியை சான்று தந்து விளக்குக.

42. **பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.**

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவேபந்
தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே! - கவிமணி

43. 'கடல்' அல்லது 'விடாமுயற்சி' என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) நடைப்பயணிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது – இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல் வழி மதிப்பீடு செய்க.

**(அல்லது)**

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாமல் விளக்குக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) 'அம்ம வாழி' எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல்

ஆ) 'யான்' என முடியும் குறள்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. இ) யானை டாக்டர் - குறும்புதினம்
2. அ) நற்றிணை
3. இ) அமைச்சர் மன்னரிடம்
4. இ) எழுத்துமொழியை விட, பேச்சுமொழி எளிமையானது.
5. i) அ - மட்டும் சரி
6. ஆ) 1921
7. ஈ) ஆசிரியர்
8. இ) நெகிழி
9. அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
10. அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி
11. ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
12. அ) ட
13. இ) இளையராஜா
14. அ) உவமை

### பகுதி - II

15. ஒரு பறவையின் சிறகிலிருந்து பிரிந்து விழுந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் அப்பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது.
16. செயல் வலிமை, தன் வலிமை, பகை வலிமை, துணை வலிமை இவை நான்கும் ஆராய்ந்து செயல்பட வேண்டிய செயல்கள் ஆகும்.
17. 
   - ஓடி வருகின்ற ஆற்று நீரைத் தேக்கினர் ,வாய்க்கால் அமைத்தனர் ,நிலத்தைப் பண்படுத்தினர்.
   - உழுது வேளாண் தொழில் செய்தனர் ,வேளாண் தொழில் செய்தவர், சிற்றூர் அமைத்தனர்.

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- கனிம வளங்களைக் கண்டறிந்தனர்,கடலில் மூழ்கி முத்தும், மண்ணைத் தோண்டி தங்கமும் எடுத்தனர்.
- இவை யாவும் உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தனவாகும்.

18. பால்வீதி, ஆலாபனை, நேயர்விருப்பம், சுட்டுவிரல், பித்தன்

19.
- தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை
- இதுவே, இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையாகும்.

20.
- தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் கல்வி, உயர்நிலைக் கல்விமுறை என்ற வகைமை ஆகும்.
- திருவாடுதுறை ஆதீன மடத்தின் தலைமைப்புலவராக விளங்கியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.
- மீனாட்சி சுந்தரனாரிடம் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதர் உயர்நிலைக்கல்வி முறையில் பாடம் பயின்றார்.

21.
- நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும்.
- மலர்ச் செப்பினுள் வழக்கம்போல் போவதும் வருவதும்தான் அவற்றின் வேலை.

22. அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

ஆ) மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

23. உயிரெழுத்து = உயிர் + எழுத்து – ர், மெய்யீறு

பன்னிரண்டு = பத்து + இரண்டு – த் + உ, உயிரீறு

திருக்குறள் = திரு + குறள் – ர் + உ, உயிரீறு

நாலடியார் = நான்கு + அடியார் – க் + உ, உயிரீறு

24. குமரனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள் என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

25. அ) **தங்கை :** அண்ணன் தங்கைப் பாசம் அகிலத்தில் புனிதம் நிறைந்தது.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**தம் கை :** குழந்தைகள் தம் கைகளால் பிசைந்த உணவானது அமிழ்தத்தைவிட மேலானது.

ஆ) **அறிவில்லாதவன் :** அறிவில்லாதவன் அனைத்தும் இருந்தும் ஏதும் இல்லாதவனாவான்.

**அறிவில் ஆதவன் :** கற்றறிந்தாரைச் சான்றோர் அறிவில் ஆதவன் என்பர்.

26. அ) கடந்து = கட + த்(ந்) + த் + உ
கட – பகுதி, த்(ந்) – த் - (ந் ஆனது விகாரம்),
த் – இறந்தகால இடைநிலை, உ – வினையெச்ச விகுதி.

ஆ) வருகின்ற - வா (வரு) + கின்று + அ
வா – பகுதி (வரு எனத் திரிந்தது விகாரம்),
கின்று – நிகழ்கால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி

27. அ) இனக்குழு ஆ) பண்பாட்டுக் கூறுகள்

28. உலை, உளை, உழை

மன **உளைச்சல்** தீரவும் வீட்டில் **உலை** கொதிக்கவும் **உழைக்க** வேண்டும்.

29. அ) தண்டுடை – தண்டு + உடை

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் எனும் விதிப்படி, தண்ட் + உடை என்றாயிற்று.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ட் + உ = டு) தண்டுடை எனப்புணர்ந்தது.

ஆ) காற்றிலாடும் – காற்றில் + ஆடும்

- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ல் + ஆ = லா) காற்றிலாடும் எனப் புணர்ந்தது.

30. ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.

- நேரிசை ஆசிரியப்பா
- நிலைமண்டில ஆசிரியப்பா
- இணைக்குறள் ஆசிரியப்பா
- அடிமறிமண்டில ஆசிரியப்பா

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 3

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்**
**காலத்தால் சாகாததொல் கனிமங்கள் - அடிமோனையைத் தெரிவு செய்க.**

அ) கபாடபுரங்களை - காவுகொண்ட

ஆ) காலத்தால் - கனிமங்கள்

இ) கபாடபுரங்களை - காலத்தால்

ஈ) காலத்தால் - சாகாத

**2. 'திருமலை முருகன் பள்ளு' நூலில் விரவி வந்துள்ள பாவகைகள் __________**

அ) கலித்துறை ஆ) கலிப்பா

இ) சிந்து ஈ) இவையனைத்தும்

**3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று.**

அ) சாழல் ஆ) சிற்றில்

இ) சிறுதேர் ஈ) சிறுபறை

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. **பொருந்தாததைத் தேர்க.**

அ) ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்புகள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

ஆ) ஒவ்வொரு நாள் நிகழ்வுக்கும் ஆண்டு, திங்கள், நாள், கிழமை, நேரம், நிகழ்விடம் ஆகியவற்றைக் குறிப்பிடாமல் செய்திகளை எழுதியுள்ளார்.

இ) ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஈ) ஐரோப்பாவிலிருந்து இந்தியாவை அடையக் கப்பல்களுக்கு எட்டுத்திங்கள் தேவைப்பட்டன.

i) அ, ஆ ii) ஆ, இ
iii) அ, இ iv) ஆ, ஈ

5. **ஏழைகளின் கற்பக விருட்சம் என்று போற்றப்படும் மரம்?**

அ) மா ஆ) பலா
இ) வாழை ஈ) பனை

6. **'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?**

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை
இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

7. **நிழல்போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?**

அ) வினை ஆ) பயன்
இ) வடிவம் ஈ) உரு

8. **Debate- என்பதன் தமிழ்ச்சொல்**

அ) புனைபெயர் ஆ) பட்டிமன்றம்
இ) உத்திகள் ஈ) சமத்துவம்

9. **பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

10. **'செங்கயல்'- இலக்கணக்குறிப்பு தருக:**

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

11. **கீழ்க்காண்பனவற்றுள் 'இறைச்சி' பற்றிய கூற்றைத் தேர்க.**

அ) குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும்
ஆ) ஒப்பீட்டுச் செறிவும் பொருள் அழுத்தமும் சிறக்க அமையும்.
இ) வினை, பயன், வடிவம், நிறம் ஆகிய நான்கின் அடிப்படையில் தோன்றும்.
ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.

12. **'ஈறுபோதல் என்ற விதிக்கான சான்று**

அ) கருங்கல் ஆ) ஐம்பதாண்டு
இ) சிறுகோல் ஈ) இழுக்கின்றி

13. **வாடிவாசல் என்னும் குறும் புதினத்தின் ஆசிரியர்**

அ) சி.சு.செல்லப்பா ஆ) சி.சு.சின்னப்பா
இ) இந்திரன் ஈ) ஜெயகாந்தன்

14. **மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

அ) அன்னம் - கிண்ணம் ஆ) டமாரம் - இங்ஙனம்
இ) ரூபாய் - லட்சாதிபதி ஈ) றெக்கை - அங்ஙனம்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்?
எண்ணுபவர்கள் யார்?

17. ‘மனைமருட்சி’ என்று கூறப்படும் ‘மகள் நிலை உரைத்தல்’ பற்றி எழுதுக.

18. மருத்துவத்தின் பிரிவுகளாகக் குறள் கூறுவன யாவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

20. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

21. ‘குரவர்’ என்பார் எவற்றைக் கற்பித்தனர்?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

**22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

**23. தமிழில் ஆக்கப்பெயர் விகுதிகளைக் கூறுக.**

**24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

கவிதை என்பது எது? என்ற இந்த கேள்விக்கு எனக்கு தற்சமயம் கிடைக்கும் விடை இதுதான்.

**25. விடைக்கேற்ற வினாவாக மாற்றுக.**

அ) திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில், அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஜி.யு. போப்.

ஆ) அகநானூறு களிற்றுயானை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என மூன்று பிரிவுகளைக் கொண்டது.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) பிரிந்தோர் ஆ) செய்தல்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Education Committee

ஆ) Classical Language

**28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டுப் படுத்தான்.

ஆ) இந்த வூட்டுக்குக் கொடக்கூலி இன்னா

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) அணிந்துரை ஆ) தாளாற்றி

30. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

## குதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்களை விளக்குக.

32. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33. உணவும் உறக்கமும் அணில் கனவாம்
உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

34. சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36. கலைச் சொல்லாக்கத்திற்கும் – அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

37. ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்களைக் குறிப்பிடுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



38. சங்ககாலத்தில் தமிழ்மொழியின் நிலை பற்றி இராசமாணிக்கனாரின் கூற்று யாது?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. 'சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டும்' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

The oldest documented forms of art are visual arts, which include creation of images or objects in fields including today painting, sculpture, print making, photography and other visual media. Music, theatre, film, dance and other performing arts, as well as literature and other media such as interactive media, are included in a broader definition of art or the arts. Until the 17th century, are referred to any skill or mastery and was not differentiated from crafts or sciences. Art has had a great number of different functions throughout its history, making its purpose difficult to abstract or quantify to any single concept. This does not imply that the purpose of Art is 'vague', but that it has had many unique, different reasons for being created.

41. உருவக அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக. (அல்லது)
இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து இக்குறட்பாவில் பயின்று
வரும் அணியை விளக்குக.

42. மெய்ப்புத் திருத்துநர் பணி வேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்கு கீழ்க்காணும் விவரங்களுடன் தன் விவரக் குறிப்பு ஒன்று எழுதுக.

43. **'தாய்'** அல்லது **'முயற்சி'** என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துக்களை எழுதுக.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயைந்தே இருந்தன – கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) கல்லும் கதை சொல்லும் – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருத்துவதை விளக்கி எழுதுக.

46. அ) தமிழர் வாழ்வோடு புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுப்படுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) 'ஆக்கியோன் பெயரே' எனத் தொடங்கும் நன்னூல் பாயிரம் பாடல்

ஆ) 'விடற்கு' என முடியும் குறள்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. இ) கபாடபுரங்களை - காலத்தால்
2. ஈ) இவையனைத்தும்
3. அ) சாழல்
4. iv) ஆ, ஈ
5. ஈ) பனை
6. இ) மக்கள் வெள்ளம்
7. ஈ) உரு
8. ஆ) பட்டிமன்றம்
9. இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.
10. இ) பண்புத்தொகை
11. ஈ) உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருள்.
12. இ) சிறுகோல்
13. அ) சி.சு.செல்லப்பா
14. அ) அன்னம் - கிண்ணம்

### பகுதி - II

15. • நூல் - திருமலை முருகன் பள்ளு, தென்கரை நாடு.
    • ஆசிரியர் - பெரியவன் கவிராயர்.
    • தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக்கூட்டங்கள் தங்கிச் செல்லும். (கா - சோலை)
16. • எண்ணச் சொல்கிறவர்கள் - ஆசிரியர்கள்
    • எண்ணுபவர்கள் - மாணவர்கள்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. • 'மகள் நிலை உரைத்தல்' என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது ஆகும்.
• இதனை 'மனைமருட்சி' என்றும் கூறுவர்.

18. • நோயாளி
• மருத்துவர்
• மருந்து
• மருந்தாளுநர்

19. • தமிழ் - கோட்டை, கோடு
• மலையாளம் - கோட்ட, கோடு
• கன்னடம் - கோட்டே, கோண்டே
• தெலுங்கு - கோட்ட
• துளு - கோட்டே
• தோடா - க்வாட்

20. நாகரம், வேசரம், திராவிடம் என்பன.

21. 'குரவர்' என்பார் சமயநூலையும் தத்துவநூலையும் கற்பித்தனர்.

22. அ) விடியற்காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.
ஆ) முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.

23. • காரன், காரர், காரி, ஆள், ஆளர், ஆளி, தாரர், மானம்.
• **சான்று:** வண்டிக்காரன், வேலைக்காரி, ஆணையாளர்.

24. கவிதை என்பது யாது? என்ற இந்தக் கேள்விக்கு எனக்குத் தற்சமயம் கிடைக்கும் விடை இதுதான்.

25. அ) திருக்குறளை ஐரோப்பியரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) அகநானூற்றின் பெரும் பிரிவுகள் யாவை?

26. அ) பிரிந்தோர் = பிரி + த்(ந்) + த் + ஓர்

பிரி – பகுதி, த்(ந்) – சந்தி (த்-ந் ஆனது விகாரம்),
த் – இறந்தகால இடைநிலை, ஓர் – பலர்பால்
வினைமுற்று விகுதி.

ஆ) செய்தல் = செய் + தல்

செய் – பகுதி, தல் – தொழிற்பெயர் விகுதி.

27. கல்விக்குழு, செம்மொழி

28. அ) சோறு உண்டு , பழம் தின்று , பால் பருகிப் படுத்தான்.

ஆ) இந்த வீட்டுக்குக் குடிக்கூலி என்ன?

29. அ) அணிந்துரை – அணிந்து + உரை

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் எனும் விதிப்படி அணிந்த் + உரை என்றாயிற்று.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி அணிந்துரை எனப் புணர்ந்தது.

ஆ) தாளாற்றி – தாள் + ஆற்றி

- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ள் + ஆ = ளா) தாளாற்றி என்றாயிற்று.

30. • பகுபத உறுப்புகள் மொத்தம் ஆறு.

- அவை : பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 4

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ) முத்துலிங்கம் – யுகத்தின் பாடல்

ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல்

இ) சு. வில்வரத்தினம் – ஆறாம் திணை

ஈ) இந்திரன் – பேச்சுமொழியும் கவிதை மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ

iii) ஆ, ஈ iv) அ, இ

**2. ஐங்குறுநூற்றின் பாடல் அடி வரையறை __________.**

அ) 4 - 8 ஆ) 9 - 12

இ) 3 - 6 ஈ) 13 - 21

**3. தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்**

அ) புரட்சிக்கவி ஆ) மனோன்மணீயம்

இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. **ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்**
அ) நம்மாழ்வார் ஆ) மசானபுஃபுகோகோ
இ) பாப்லோ ஈ) பெரியாழ்வார்

5. **ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் __________ என்பதாகும்**
அ) நூல் ஆ) ஓலை
இ) எழுத்தாணி ஈ) தாள்

6. **சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ள தாகூரின் கடிதங்கள் என்னும் நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் __________.**
அ) த.நா. குமாரசுவாமி ஆ) வா.செ.குழந்தைசாமி
இ) ம.பொ.சிவஞானம் ஈ) ச. அகத்தியலிங்கம்

7. **கூவும் குயிலும் கரையும் காகமும் - தொடரில் இடம்பெற்ற மரபு**
அ) பெயர் மரபு ஆ) வினை மரபு
இ) ஒலி மரபு ஈ) இவை மூன்றும்

8. **Fine Arts- என்பதன் தமிழ்ச்சொல்**
அ) தொன்மம் ஆ) நுண்கலைகள்
இ) கல்வெட்டு ஈ) ஆவணப்படம்

9. **சரியான கூற்றினைக் கண்டறி.**
i) ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.
ii) உயிரெழுத்துகள் பன்னிரண்டும் சொல்லின் இறுதியில் வரும்.
iii) இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்தே வருகின்றன.

10. **'வழி வழி'- இலக்கணக்குறிப்பு தருக:**
அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) அடுக்குத்தொடர் ஈ) உவமைத்தொகை

11. **பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**
அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



இ) பகுதி, சந்தி, விகாரம்

ஈ) பகுதி, விகுதி

**12. மா முன் நேர் ஒன்றி வந்தால் __________ தளையாகும்.**

அ) நேரொன்றாசிரியத் ஆ) நிரையொன்றாசிரியத்

இ) கலித்தளை ஈ) இவற்றில் எதுவுமில்லை

**13. பிரபஞ்சனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்**

அ) வானம் வசப்படும் ஆ) மகாநதி

இ) காகித மனிதர்கள் ஈ) இருட்டுவாசல்

**14. நிகழ்கால இடைநிலைகளுக்குப் பொருந்தாததைக் கண்டறி.**

அ) கிறு ஆ) கின்று

இ) ஆநின்று ஈ) ப், வ்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16. நற்றிணை - குறிப்பு வரைக.

17. எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

18. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

21. தஞ்சைப் பெரிய கோவில் - பிரமந்திரக்கல் குறித்தெழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**
    எலியும் பூனையும் போல

23. ‘பா’ என்பதைக் குறிக்கும் வெவ்வேறு சொற்களை எழுதுக.

24. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**
    பள்ளிகூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறை கல்வியையும் பெறுதலே முறையானதென்றும், அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

25. **வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக.**
    காட்டில் யானை கத்தியது, நரி கூவியது
    ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
    அ) பொலிந்த ஆ) நெருங்கின

27. **கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**
    அ) Religion ஆ) Philosophy

28. **புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
    (கம்பு, மை, வளை, ஆழி)
    1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும் ________
    2. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம் ________

29. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
    அ) நீரோடை ஆ) கற்பிளந்து

30. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

32. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்
– இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறு.

33. ஐங்குறுநூறு சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

34. தமிழகப் பெண்கள் பாடிக் கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. கூற்று – குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.
கவிதை – கூண்டு திறந்தது சிறகடிக்கவா?
இல்லை! சீட்டெடுக்க.
கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?

36. திராவிட பழங்குடியினரின் இனக்குழுப் பெயர்கள் ‘மலை’ என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டே உருவாகியுள்ளன என்பதற்குச் சான்று தந்து விளக்குக.

37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

38. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. 'இளங்கன்று பயமறியாது' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

**Balu** Hi, Good evening.

**Velu** Hi Balu, Good evening.

**Balu** Yesterday you were watching the Republic day function the whole day.

**Velu** Yes, I was touched by one award ceremony.

**Balu** Which award?

**Velu** Paramvir Chakra award, highest award for army personnel.

**Balu** Why were you touched?

**Velu** Most of the awards were received by the wives of soldiers posthumously.

**Balu** Why? What do you mean by Posthumous?

**Velu** It means 'after death'. Many soldiers had laid down their lives protecting the border of our Motherland. They have sacrificed their lives to save our Country. So that we can be free and safe.

41. பிறிதுமொழிதல் அணி (அல்லது)
நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைக் கண்டறிந்து விளக்குக.

42. கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாக மாற்றுக. கதையில் காணலாகும் எவையேனும் ஐந்து பிறமொழிச் சொற்களுக்கு உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



அலுவலகத்துக்குள் நுழைகையில் போன் அடித்து. எடுத்துப் பேசினாள். மறுமுனையில் "உடனே ஆபிஸ்க்கு லீவ் போட்டுட்டு என் ஆபிஸ்க்கு வா கவி. இன்ஷூரன்ஸ் பேப்பர்ல கையெழுத்து போடணும். உன் போட்டோவையும் சஞ்சுவின் போட்டாவையும் எடுத்துட்டு வா" என்று சொல்லி முடித்ததும் போனைத் துண்டித்தான் செந்தில். ஏற்கெனவே தன் ஆபிஸில் நடக்க இருக்கும் ஆடிட்-ஐ நினைத்துக் கொண்டிருந்த அவளுக்குச் செந்திலின் போன் பதரூற்றத்தையும் குழப்பத்தையும் தந்தது. குழப்பத்துடன் போனை வைக்கையில் மறுபடியும் போன் ஒலித்தது. இம்முறை சஞ்சுவின் பள்ளி நம்பர். ஒரு நொடி பதற்றமாகிவிட்டது. எதற்கு அழைக்கிறார்களோ? என்று பயந்தபடி போனை எடுத்தேன். போனில் சஞ்சுவின் குரல். "அம்மா நான்தான்" என்றான். "என்னடா, உடம்புக்கு எதாவதா?" என்றேன் டென்ஷனை மறைத்தபடி. "அதெல்லாம் ஒன்னுமில்லைம்மா. மிஸ் கிட்ட ஸ்பெஷல் பர்மிஷன் கேட்டு உனக்கு போன் பண்றேன். காலையிலேயே சொல்ல நினைச்சேன். மறந்திட்டேன். ஸாரிம்மா என்றான். எதுக்குடா சஞ்சு ஸாரி என்றேன். இன்னிக்கு உனக்கு பர்த்டேம்மா. மறந்துட்டியா" என்றான். அட ஆமாம். ஜூலை பத்து. இப்படியா மறப்பேன். செந்தில் கூட நினைவில் வைத்து வாழ்த்தவில்லை. சஞ்சு கொஞ்சும் குரலில் "ம்மா நைட்கூட ஞாபகம் இருந்துச்சு காலைல டக்குனு மறந்துட்டேன். சாரிம்மா ஹாப்பி பர்த்டே டூ யூ" என்றான். ஒரு நொடி எதுவும் பேச முடியாமல் திக்கிவிட்டேன். அவனே தொடர்ந்து "அம்மா உனக்காக ஒரு சூரியகாந்திப்பூ வரைஞ்சி வச்சிருக்கேன். ஈவ்னிங் சீக்கிரமா வா தரேன் ஓகேவா?" என்றான். "தாங்க்ஸ்டா செல்லம், தாங்க்யூ ஸோ மச்" என்றேன். அந்த நாளின் சுமைகள் எல்லாம் கரைந்து மனசு நெகிழ்ந்து உருகியது. ரயில், அலுவலகம், செந்தில் என எல்லாம் மறைந்து போய், நானும் சஞ்சுவும் கைகள் கோர்த்து நடப்பது போல இருந்தது.

43. 'புயல்' அல்லது 'சுனாமி' என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராசனின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுக்க.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) 'ஆக்கியோன்' - எனத் தொடங்கும் நன்னூல் பாயிரம் பாடல்.

ஆ) 'தவர்' என முடியும் குறள்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. iii) ஆ, ஈ
2. இ) 3 - 6
3. ஆ) மனோன்மணீயம்
4. ஆ) மசானபுஃகுபுகோகோ
5. அ) நூல்
6. அ) த.நா. குமாரசுவாமி
7. இ) ஒலி மரபு
8. ஆ) நுண்கலைகள்
9. அ) மூன்றும் சரி
10. இ) அடுக்குத்தொடர்
11. ஈ) பகுதி, விகுதி
12. அ) நேரொன்றாசிரியத்
13. அ) வானம் வசப்படும்
14. ஈ) ப், வ்

### பகுதி - II

15.
- மரங்கள் வெட்டப்பட்டன.
- வான்மழை பொய்த்தது.
- மண்வளம் குன்றியது.
- குருவிகள் கூடுகட்டி வாழ மரங்கள் இல்லை.
- வாழ ஏதுமின்மையால் ஏதிலியாய்க் குருவிகள் எங்கேயோ பறந்து சென்றுவிட்டன.

16.
- நற்றிணை எட்டுத்தொகை நூல்களுள் முதல் நூல்.
- இது, நானூறு பாடல்களைக் கொண்டது.
- 9 அடிகளைச் சிற்றெல்லையாகவும், 12 அடிகளைப் பேரெல்லையாகவும் கொண்டது.
- கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. உண்டதும் செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியது இல்லை.
18. நடராசன் நாங்கூழ்ப் புழுவை நோக்கி, மண்ணைப் பக்குவப்படுத்தி பயிர் விளைவிக்கின்றாய். இவ்வுதவியை எண்ணாமல் எறும்பு முதலிய பூச்சிகள் கடிக்கின்றன. அதிலும் பொறுமை காக்கிறாய்.
19. எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.
    - எழுத்துமொழி - எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.
    - பேச்சுமொழி - முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காடடிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.
    - அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்திமிக்கதாக உள்ளது.
20. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணப்படும் பெண் அதிகாரிகளின் பெயர்கள்:
    - எருதந் குஞ்சர மல்லி – (இராசராசன் காலம்)
    - அதிகாரச்சி சோமயன் அமிர்த வல்லி - என்பன (இராசாதிராசன் காலம்)

    அறியலாகும் செய்தி:
    - ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெண்கள் அதிகாரிகளாகப் பணிபுரிந்திருக்கின்றனர்.
    - ‘ஆணுக்குப் பெண் இளைப்பில்லைக் காண்’ என்ற பாரதியின் கனவே அந்நாட்களிலேயே நடந்தேறியுள்ளது.
21. பிரமந்திரக்கல் ஒற்றைக்கல் அன்று.
    - பதின்மூன்று தளங்கள் கொண்டது.
    - கருவறையின் மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக உள்ளது.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



22. ரகுவும் ரவியும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.

23. செய்யுள், தூக்கு, கவி, கவிதை, பாட்டு.

24. பள்ளிக்கூடங்களில் பயிலும் மாணவர்கள், தாய்மொழி வழியாகவே அனைத்துத் துறைக் கல்வியையும் பெறுதலே முறையானதென்றும் அத்தகையக் கல்வியேப் பயனளிக்குமென்றும் போப் கருதினார்.

25. காட்டில் யானை பிளிறியது. நரி ஊளையிட்டது

ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது.

26. அ) பொலிந்த = பொலி + த்(ந்) + த் + அ

பொலி - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்),
த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி.

ஆ) நெருங்கின = நெருங்கு + (இ)ன் + அ

நெருங்கு – பகுதி, இ(ன்) – இறந்தகால இடைநிலை, அ – பெயரெச்ச விகுதி.

27. அ) சமயம் ஆ) தத்துவம்

28. 1. வளை 2. மை

29. அ) நீரோடை = நீர் + ஓடை

- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ர் + ஓ = ரோ) நீரோடை எனப்புணர்ந்தது.

ஆ) கற்பிளந்து = கல் + பிளந்து

- லள வேற்றுமையில் வலிவரின் றடவும் எனும் விதிப்படி, கற்பிளந்து எனப்புணர்ந்தது.

30.
- மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் = 22
- அவை, உயிர் எழுத்துகள் = 12
- க், ச், த், ப், ங், ஞ், ந், ம், ய், வ் என்னும் மெய்யெழுத்துகள் = 10
- மெய்யெழுத்துகள் உயிர் எழுத்துகளோடு சேர்ந்து உயிர்மெய் எழுத்துகளாக மொழிக்கு முதலில் வரும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 5

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பாயிரம் இல்லது __________ அன்றே**

அ) காவியம் ஆ) பனுவல்

இ) பாடல் ஈ) கவிதை

**2. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்

இ) முருகன் ஈ) பாரதியார்

**3. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமாவால் வெளியிடப்பட்டது. 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது.**

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி

ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா

ஈ) கட்டுரை நூல், குற்றாலக்கோவை

**4. மசானபு ஃபுகோகா __________ நாட்டு அறிஞர்.**

அ) ஜப்பான் ஆ) ஐஸ்லாந்து

இ) அயர்லாந்து ஈ) சிங்கப்பூர்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



5. **சரியான விடையைத் தேர்க.**

அ) கல்வி அழகே அழகு - 1. தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல்

ஆ) இளமையில் கல் - 2. திருமந்திரம்

இ) துணையாய் வருவது தூயநற்கல்வி - 3. ஆத்திசூடி

ஈ) பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் - 4. திருக்குறள்

- 5. நாலடியார்

i) அ-2, ஆ-3, இ-4, ஈ-1

ii) அ-3, ஆ-4, இ-1, ஈ-2

iii) அ-5, ஆ-3, இ-2, ஈ-1

iv) அ-4, ஆ-1, இ-2, ஈ-5

6. **'தட்சிணமேரு' என்று தஞ்சைப் பெரிய கோவிலை அழைத்தவர் ________.**

அ) இராசராசன் ஆ) இராசேந்திரன்

இ) கரிகாலன் ஈ) பராந்தகன்

7. **பதினெட்டு மெய்களுள் உடம்படுமெய்களாக வருபவை ________**

அ) ப், ம் ஆ) ய், வ்

இ) க், ச் ஈ) ற், ன்

8. **Bug - என்பதன் தமிழ்ச்சொல்**

அ) பிழை ஆ) அரசிதழ்

இ) நடுவர் ஈ) நுகர்வோர்

9. **அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்**

அ) அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில்

ஆ) அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ) அடையாறுப் பாலத்தின் சுவற்றில்

ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**10. 'தமிழ்க்கவிஞர்' - இலக்கணக்குறிப்பு தருக.**

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) இருபெயரொட்டுப்பண்புத்தொகை

**11. சரியானக் கூற்றினைக் கண்டறி.**

i) தமிழ்நாட்டில், கல்வித்துறையில் மூன்றாம் பாலினப் பிரிவு உருவாக்கப்பட்ட பின்பு பள்ளிப்படிப்பை முடிக்கும் முதலாமவர் தாரிகா பானு.

ii) இவர், திருவள்ளுவர் மாவட்டத்தின் அம்பத்தூரில் காமராஜர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அறிவியில் பாடப்பிரிவில் பயின்றார்.

iii) 2017ஆம் ஆண்டு நடந்த மேல்நிலைப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

iv) தற்போது அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் பயின்று வருகிறார்.

அ) i, ii- சரி ஆ) ii, iii- சரி

இ) நான்கும் சரி ஈ) ii, iii, iv - சரி

**12. குறிஞ்சித்திணைக்குரிய சிறுபொழுது**

அ) மாலை ஆ) நண்பகல்

இ) யாமம் ஈ) எற்பாடு

**13. முகம் மாற்றி முகம் மாற்றி நம் உண்மை முகத்தையே இழந்து அடையாளமற்ற தன்மையில் காட்சியளிப்பதைக் காட்டும் சிறுகதை __________**

அ) பிம்பம் ஆ) யானை டாக்டர்

இ) ஆறாம்திணை ஈ) செவ்வி

**14. விளம் முன் நிரை ஒன்றி வந்தால் __________ தளையாகும்.**

அ) நேரொன்றாசிரியத் ஆ) நிரையொன்றாசிரியத்

இ) ஒன்றிய வஞ்சித் ஈ) கலித்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. அகநானூறு திணை அமைப்பினை விளக்குக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



16. பள்ளு - சிறுகுறிப்பு வரைக.
17. சிங்கி பெற்ற பரிசுகளைக் குறிப்பிடுக.
18. செந்துறைப் பாடாண்பாட்டு - துறை விளக்கம் எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - குறிப்பு வரைக.
20. பட்டினிக்குரத்தி - குறிப்பு வரைக.
21. கேரளாந்தகன் வாயில் கோபுரம் எனப் பெயரிடப்பட்டதேன்?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22. **வேர்ச் சொற்களை தொடர்களாக மாற்றுக.**
அ) தா ஆ) பேசு

23. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

24. **விடைக்கேற்ற வினாவை எழுதுக.**
அ) வைஜெயந்தி மாலாவின் நடனத்தால் ஈர்க்கப்பட்ட நர்த்தகி தஞ்சை கிட்டப்பாவிடம் நடனம் கற்றார்.
ஆ) குறுந்தொகைக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பெருந்தேவனார்.

25. **பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**
அண்ணம், அன்னம்

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) ஆழ்க ஆ) பறித்தார்

27. **கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**
அ) Passport ஆ) Awareness

28. **மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**
சொந்தக்காலில் நிற்றல்

29. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) கருவிழி ஆ) பாசிலை

30. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

31. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32. சின்னதொரு துண்டைத்
திரும்பத் திரும்பக் கட்டி
அழகு பார்க்கிறாள் செல்ல மகள்
முந்தானையை இழுத்துப் போர்த்திக் கொள்கிறாள்
ஒரு குட்டி நாற்காலியே வீடாகிவிடுகிறது
துண்டைக் கட்டிக்கொண்டு தாயாகவும்
மாறிக்கொள்ள முடிகிறது அவளால்.
துண்டு ஒன்றுதான்...
அதுவே அவளது மகிழ்ச்சியும்
என் துக்கமும்
- இப்புதுக்கவிதையில் வெளிப்படும் கருத்தை ஆராய்ந்து எழுதுக.

33. குறிஞ்சித்திணையை சான்றுடன் விளக்குக.

34. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. பேச்சுமொழி, எழுத்துமொழி குறித்து இந்திரன் கூறுவன யாவை?

36. சமணப் பள்ளிகளும், பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

37. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?

38. கோவில் என்பது வெறும் வழிபடும் தலம் மட்டுமன்று - விளக்கம் தருக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. "பழகப் பழகப் பாலும் புளிக்கும்"என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

    1. An eye for an eye only ends up making the whole world blind.
    2. You must be the change you wish to see in the world.
    3. The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
    4. Nobody can hurt me without my permission.

41. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)
உவமையணி சான்றுடன் விளக்குக

42. கீழ்க்காணும் பத்தியில் உள்ள உருவகங்களையும் உவமைகளையும் பட்டியலிடுக. உருவகங்களை உவமைகளாக மாற்றுக. உவமைகளை எவ்வகை உவமைகள் என்று எழுதுக.

விழிச்சுடர் வாசலில் உட்கார்ந்திருந்தாள். அவளது எண்ணவலையில் மின்னல்களைப் போன்ற சொற்கள் தோன்றி மறைந்தன. அடுக்கிவைக்கப்படாத புத்தகங்களைப் போலக் குழம்பிய எண்ணங்களை ஒழுங்குபடுத்த நினைத்தாள். நேரம் நத்தையைப்போல மெதுவாக நகர்ந்தது. அண்ணாந்து பார்த்தாள். நீலப்பட்டு உடுத்தியதைப் போன்ற வானம் அம்மாவை நினைவூட்டியது. பூனைக்குட்டியைப்போல அம்மாவின் முந்தானைக்குள் சுருண்டுகொள்ள நினைத்தாள். பூனைக்குட்டியை மடியில் வைத்துக்கொண்டதைப்போல அம்மாவின் கதகதப்பை உணர்ந்தாள். பசிக்கயிற்றால் சுண்டிவிடப்பட்டவள், பூட்டியிருந்த வீட்டுக்கதவின் மேல் சாய்ந்தபடி அம்மாவின வருகைக்காகக் காத்திருக்க தொடங்கினாள்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. ‘உழவு’ அல்லது ‘முயற்சி’ என்னும் தலைப்பில் மரபு – புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

**பகுதி - IV**

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை? **(அல்லது)**

ஆ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவுறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. **(அல்லது)**

ஆ) கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருத்துவதை விளக்கி எழுதுக.

46. அ) கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**நிகழ்ச்சி நிரல்**

“அரியன கேள் புதியன செய்” (திங்கள் கூடுகை)

நேரம் 2.30 பிற்பகல் இடம்: அ.மே.நி. பள்ளி

2.30 தமிழ்த்தாய் வாழ்த்து

2.35 வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன்

2.40 தலைமையுரை - திரு எழிலன், தலைமை ஆசிரியர்

2.50 சிறப்புரை - கவிஞர் வாணி
“புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை”

3.45 நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின்

4.00 நாட்டுப்பண்

**(அல்லது)**

ஆ) சிந்தனைப்பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) ‘சிற்றூரும் வரப்பெடுத்த’ – எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

ஆ) ‘விடற்கு’ என முடியும் குறள்.

## விடைக் குறிப்புகள்

## பகுதி - I

1. அ) காவியம்
2. ஆ) அண்ணாமலையார்
3. அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி
4. அ) ஜப்பான்
5. iii) அ-5, ஆ-3, இ-2, ஈ-1
6. அ) இராசராசன்
7. ஆ) ய், வ்
8. அ) பிழை
9. ஈ) அடையாற்றுப் பாலத்தின் சுவரில்
10. ஈ) இருபெயரொட்டுப்பண்புத்தொகை
11. இ) நான்கும் சரி
12. இ) யாமம்
13. அ) பிம்பம்
14. ஆ) நிரையொன்றாசிரியத்

## பகுதி - II

15.

| திணை | பாடல் வரிசை | எண்ணிக்கை |
|---|---|---|
| பாலை | 1, 3, 5, 7... | 200 |
| குறிஞ்சி | 2, 8, 12, 18... | 80 |
| முல்லை | 4, 14, 24, 34... | 40 |
| மருதம் | 6, 16, 26, 36... | 40 |
| நெய்தல் | 10, 20, 30, 40... | 40 |

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

16. • பள்ளு என்பது 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று.
   • இது உழத்திப்பாட்டு என்றும் அழைக்கப்படும்.
   • தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.

17. சிலம்பு, மணிக்கெச்சம், தண்டை, காலாழி, பீலி, பாடகம்

18. **துறை விளக்கம்:**
   • செந்துறையாவது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல் ஆகும். இதுவே செந்துறைப் பாடாண்பாட்டு எனப்படும்.
   • **எ.கா:** 'உறுபசி ஓவாப்பிணி செறுபகை இன்மையால்' – பதிற்றுப்பத்து.

   **பொருள்:**
   • பசி, பிணி, பகை அறியாத மக்கள் புலம் பெயராமல் நாட்டில் வாழும் மக்களால் சேர மன்னன் போற்றப்படுதல்.

19. • தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம்
   • ஏழைகளின் கற்பக விருட்சம் பனைமரம்
   • சிறந்த காற்றுத்தடுப்பான்
   • நிலத்தின் ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கின்ற தன்மையுடையது.
   • பனை வளர பெரிய அளவுத் தண்ணீர் தேவையில்லை.

20. • பட்டினிக்குரத்தி என்பார் சமணப்பெண் ஆசிரியர் ஆவார்.
   • இவர் விளாப்பாக்கத்தில் சமணப் பள்ளியொன்றை நிறுவியுள்ளார்.

21. • தஞ்சை பெரிய கோவிலின் கோபுரங்களில் உயரமானது, கேரளாந்தகன் கோபுரம்.
   • இராசராசன் 988 ஆம் ஆண்டு சேரநாட்டை வெற்றி கொண்டதைப் போற்றும் வகையில் இக்கோபுரத்திற்குக் 'கேரளாந்தகன் வாயில் கோபுரம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

22. அ) தா – வேர்ச்சொல்
   • தாத்தா எனக்குத் திருக்குறள் தந்தார். (வினைமுற்று)
   • தாத்தா தந்த திருக்குறள் உயர்வானது. (பெயரெச்சம்)
   • தாத்தா எனக்குத் திருக்குறள் தந்து பாராட்டினார். (வினையெச்சம்)

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- திருக்குறளைப் பரிசளித்தவர் தாத்தா ஆவார். (வினையாலணையும் பெயர்).

ஆ) பேசு - வேர்ச்சொல்
- அண்ணா மேடையில் நன்றாகப் பேசினார். (வினைமுற்று)
- அண்ணா பேசிய பேச்சு அழகாக இருந்தது. (பெயரெச்சம்)
- அண்ணா பேசி முடித்ததும் கரவொலி எழும்பியது. (வினையெச்சம்)
- கடமை கண்ணியம் கட்டுப்பாடு வேண்டும் என்று சொன்னவர் அண்ணா. (வினையாலணையும் பெயர்)

23. பகுபத உறுப்புகள் மொத்தம் ஆறு. அவை:
பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

24. அ) நர்த்தகி யாரிடம் நடனம் கற்றார்?
ஆ) குறுந்தொகைக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் யார்?

25. அச்சத்தில் நாக்கு, அண்ணத்தோடு ஒட்டிக் கொண்டது.
நளனுக்காக அன்னம், தமயந்தியிடம் தூது சென்றது.

26. அ) ஆழ்க = ஆழ் + க
ஆழ் – பகுதி, க – வியங்கோள் வினைமுற்று விகுதி.
ஆ) பறித்தார் – பறி + த் + த் + ஆர்
பறி – பகுதி, த் – சந்தி, த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

27. அ) கடவுச்சீட்டு ஆ) விழிப்புணர்வு

28. படித்துப் பதவி பெற்று, பெற்றோர் போற்றுமாறு சொந்தக் காலில் நிற்றல் பாராட்டுக்குரியது.

29. அ) கருவிழி = கருமை + விழி
ஈறுபோதல் என்ற விதிப்படி மை கெட்டு கருவிழி என்றானது.

ஆ) பாசிலை = பசுமை + இலை
- ஈறுபோதல் பசு + இலை
- ஆதிநீடல் பாசு + இலை
- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் பாச் + இலை
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே பாசிலை

30. உவமையானது, வினை, பயன், வடிவம், உரு என்னும் நான்கின் அடிப்படையில் தோன்றும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 6

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. நிறைமணி தந்தவள் என்று குறிப்பிடப்படுபவள் __________.**

அ) மணிமேகலை ஆ) கண்ணகி

இ) தமிழன்னை ஈ) பாரதத்தாய்

**2. துன்பப்படுபவர் __________.**

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

**3. நவை என்பதன் பொருள் __________.**

அ) சான்றோர் அவை ஆ) நன்மை

இ) குற்றம் ஈ) எளிமை

**4. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்**

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

5. **உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை ________ .**
அ) சாமுவேல் பெப்பிசு ஆ) ஆனந்தரங்கர்
இ) சார்லஸ் ஈ) லெபூர்தொனே

6. **பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே ________ என்று தமிழில் வழங்கப்படும்.**
அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி
இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி
ஈ) வழிபாடு, பயன்பாடு, செய்தி

7. **எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வருவது ________**
அ) இணைக்குறள் ஆசிரியப்பா
ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா
இ) நேரிசை ஆசிரியப்பா
ஈ) இவற்றில் எதுவுமில்லை

8. **Equality - என்பதன் தமிழ்ச்சொல்**
அ) வேறுபாடு ஆ) சமத்துவம்
இ) நடுநிலை ஈ) பிழை

9. **காற்புள்ளி வருமிடங்களைக் குறிப்பிடுக ________**
**i) பொருள்களைத் தனித்தனியாகக் குறிப்பிடும் இடங்கள்**
**ii) எச்சச் சொற்றொடர்கள்**
**iii) எடுத்துக்காட்டுகள், இணைப்புச் சொற்கள்**
**iv) திருமுகவிளி, இணைமொழிகள்**
அ) i, ii -சரி ஆ) ii, iii -சரி
இ) i, ii, iv -சரி ஈ) நான்கும் சரி

10. **மாநகர்'- இலக்கணக்குறிப்பு தருக:**
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) உரிச்சொல்தொடர்

11. **சரியான கூற்றினைக் கண்டறி.**
**i) நாட்குறிப்புகளின் முன்னோடியாகத் திகழ்வது EPHEMERIDES**

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**ii) EPHEMERIDES என்பது கிரேக்கக் குறிப்பேடு ஆகும்.**

**iii) EPHEMERIDES என்பதன் பொருள் ஒரு நாளுக்கான முடிவு என்பதாகும்.**

அ) i, ii - சரி ஆ) i, iii - சரி

இ) ii, iii - சரி ஈ) மூன்றும் சரி

**12. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற விதிக்கான சான்று**

அ) எத்திசை ஆ) அலைகடல்

இ) உழுதுழுது ஈ) பெருங்காடு

**13. திருநங்கை என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர்**

அ) நர்த்தகி நடராஜ் ஆ) பிரித்திகா யாஷினி

இ) தாரிகாபானு ஈ) ஜோயிதா மொண்டல்

**14. எதிர்மறை இடைநிலைகளில் பொருந்தாததைக் கண்டறி.**

அ) ஆ ஆ) ஆல்

இ) இல் ஈ) தல்

**பகுதி - II**

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. என் அம்மை ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகேவழிவழி
நினதடி தொழுதவர்,
உழுதவர், விதைத்தவர்
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே! - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.

16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

17. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

18. நிரைய வெள்ளம் - குறிப்புத் தருக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4**

19. மதிப்புக் கூட்டுப்பொருள் என்றால் என்ன?

20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21. பியால மரம் - குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14**

**22. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.**

1. வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி)
2. அறிவைத் தேடிப் போகுமிடம்; உலகம் அறிய உதவுமிடம் (அகம்)

23. உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும்?

**24. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

1. அப்பசி மாதம் அடமள இம்பாங்க
2. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா?

**25. எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக.**

அ) நெல் வயளில் கலை பரித்தபோது அறவு கடித்ததால் அளரினால்.

ஆ) நஞ்சைக் காட்டில் நெல்லுச் செடி வளத்தாங்க.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) அயர்ந்து ஆ) பெற்ற

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Prefix ஆ) EyhicGroup

**28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல்.**

மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதியக் கட்டுரைகள் அனைத்தும் புதிய புதிய செய்திகளை புலபடுத்திய விந்தை படைப்புகள்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) எதிரொலி ஆ) காலத்தச்சன்

**30.** நிலைமண்டில ஆசிரியப்பா – வரையறு.

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. “சலச வாவியில் செங்கயல் பாயும்” – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மாணவர்களின் பண்புநலன்களை எடுத்தியம்புக.

33. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா-விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.

34. பொதுவியல் திணை – சான்றுடன் விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. இந்திரன் – குறிப்பு வரைக.

36. ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்களைக் குறிப்பிடுக.

37. சமணப் பள்ளிகள் பற்றி எழுதுக.

38. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. “சுடர் விளக்காயினும் தூண்டு கோல் வேண்டும்”என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. **தமிழாக்கம் தருக.**

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and again!

41. சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கி எழுதுக.

(அல்லது)

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு
-இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர் - பாரதியார்

43. ‘அருவி’ அல்லது ‘திறன்பேசி’ என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3×6=18

44. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

**(அல்லது)**

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துக்களை எழுதுக.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சிந்தனைப்பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×6(4+2)=6

அ) 'உடைஅணிந்தேன்' எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடல்.

ஆ) 'பகை' என முடியும் குறள்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. இ) தமிழன்னை
2. ஈ) நாவைக் காக்காதவர்
3. இ) குற்றம்
4. ஆ) மழை பெய்யவில்லை
5. அ) சாமுவேல் பெப்பிசு
6. அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு
7. ஆ) நிலைமண்டில ஆசிரியப்பா
8. ஆ) சமத்துவம்
9. ஈ) நான்கும் சரி
10. ஈ) உரிச்சொல்தொடர்
11. ஈ) மூன்றும் சரி
12. இ) உழுதுழுது
13. அ) நர்த்தகி நடராஜ்
14. ஈ) தல்

### பகுதி - II

15. **வினையாலணையும் பெயர்கள்:**
தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்.

16.
- தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள்.
- உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார்.

17.
- வீரம்
- மானம்
- முன்னோர் வழி நடத்தல்
- நம்பிக்கைக்கு உரியவர் ஆதல்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



18. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்துப்பாடலில் சேரலாதனின் படைவீரர் பகைவர்முன் நிரையபாலரைப் போலப் (நரகத்து வீரர்கள்) படைவெள்ளமாக நின்றதால் 'நிரைய வெள்ளம்' என்று கூறப்பட்டுள்ளது.

19. ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக்கூட்டுப்பொருள் என்பர்.

**சான்று:** பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும்.

20. • இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் போர் மூண்டது.
- கப்பல்களின் வருகை தடைபட்டுப் பெரும் பொருளாதாரத் தட்டுப்பாடு தோன்றியது.
- ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாமல் ஆளுநர் துன்பப்பட்டார்.
- 8.6.1746 ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் வந்தன.
- கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும் நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற் போலவும்,
- மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்,
- நீண்ட நாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற் போலவும்,
- தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள். அதனைக் காகிதத்தில் எழுத முடியாது என்று வணர்ணிக்கிறார்.

21. • சாந்திநிகேதனத்திலிருக்கும் மரத்தின் பெயர் 'பியால்'.
- சமஸ்கிருத காவியங்களில் புகழ்பெற்ற மரமாக இது விளங்குகிறது.

22. 1. உளவாளி
2. படிப்பகம்/நூலகம்

23. உவமை வினை (தொழில்), பயன், வடிவம் (மெய்), உரு (நிறம்) என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும் என்பார் வள்ளுவர்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



24. 1. ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்.
    2. விடிவதற்குள் வெற்றிலை போடுவது ஒரு பழக்கமா?

25. அ) நெல் வயலில் களை பறித்தபோது அரவு கடித்ததால் அலறினாள்.

    ஆ) நன்செய் காட்டில் நெற்பயிர் வளர்த்தார்கள்.

26. அ) அயர்ந்து - அயர் + த்(ந்) + த் + உ

    அயர் - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

    ஆ) பெற்ற - பெறு(பெற்று) + அ

    பெறு - பகுதி (பெற்று என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது), அ - பெயரெச்ச விகுதி

27. அ) முன்னொட்டு

    ஆ) இனக்குழு

28. மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதிய கட்டுரைகள் அனைத்தும் புதியபுதிய செய்திகளைப் புலப்படுத்திய விந்தைப் படைப்புகள்

29. அ) எதிரொலி – எதிர் + ஒலி

    - உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ர் + ஒ = ரொ) எதிரொலி எனப் புணர்ந்தது.

    ஆ) காலத்தச்சன் – காலம் + தச்சன்

    - மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் எனும் விதிப்படி, கால + தச்சன் என்றானது.
    - வன்மைக்கு இனமாத் திரிபவும் எனும் விதிப்படி, காலத்தச்சன் என்புணர்ந்தது.

30. - எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் பெற்று வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாகும்.
    - ‘ஏ’ என்ற எழுத்தாலும் ‘என்’ என்ற அசைச்சொல்லாலும் முடியும்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# ● மாதிரி வினாத்தாள் - 7 ●

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**2. குறுந்தொகைக்கு கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் ________**

அ) வெள்ளிவீதியார் ஆ) பூரிக்கோ

இ) பெருந்தேவனார் ஈ) வரந்தருவார்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

3. **அகநானூற்றின் வேறுபெயர்**

அ) அன்பின் அகநானூறு ஆ) அகநானூற்று மாலை

இ) நெடுந்தொகை நானூறு ஈ) குறுந்தொகை நானூறு

4. **கூற்று : கோடு என்பது தமிழ்ச்சொல் ஆகும்.**

**விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.**

அ) கூற்று - சரி, விளக்கம் - தவறு

ஆ) கூற்றும் - சரி, விளக்கமும் - சரி

இ) கூற்று - தவறு, விளக்கம் - சரி

ஈ) கூற்றும் - தவறு, விளக்கமும் - தவறு

5. **KVT COMPLEX என்பதன் பொருள்**

அ) கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்

ஆ) கொற்கை வயலூர் தொண்டி வளாகம்

இ) கூடலூர் வஞ்சி தொண்டி வளாகம்

ஈ) கரூர் வஞ்சி திருச்சி வளாகம்

6. **தாகூர் இலக்கியத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற நூல்**

அ) கீதாஞ்சலி ஆ) தாகூரின் கடிதங்கள்

இ) கபி கஹினி ஈ) கோரி - ஓ - கமல்

7. **பொருள் இலக்கணமான வாழ்வின் இலக்கணத்தை வகுத்துக் கூறும் நூல்**

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்

இ) இலக்கணவிளக்கம் ஈ) தொன்னூல் விளக்கம்

8. **Ancestor - என்பதன் தமிழ்ச்சொல்**

அ) மனஆற்றல் ஆ) உட்கட்டமைப்பு

இ) மூதாதையர் ஈ) மதிப்புக்கல்வி

9. **சரியான கூற்றினைக் கண்டறி.**

i) **இறைச்சி வடமொழியினர் குறிப்பிடுகின்ற தொனிக்கு இணையானது**

ii) **தொனி அகப்பாடல்களிலும், புறப்பாடலிலும் வரும்.**

iii) **இறைச்சி அகப்பாடலில் மட்டுமே வரும்.**

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



அ) i, ii - சரி ஆ) ii, iii - சரி
இ) ii, iii - சரி ஈ) மூன்றும் சரி

**10. நனி இனிக்கும், வெண்சுவை ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு**

அ) உரிச்சொல்தொடர், ஈற்றுப்போலி
ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை
ஈ) உரிச்சொல்தொடர், பண்புத்தொகை

**11. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குக.**

அ) நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களில் பேசுகிறேன்.
ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
இ) இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.
ஈ) இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**12. 'மாசற்றார்' என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைத் தேர்வு செய்க.**

**i) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்**
**ii) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**
**iii) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

அ) முதல் இரண்டும் சரி ஆ) முதல் மட்டும் சரி
இ) மூன்றும் சரி ஈ) இரண்டு மட்டும் சரி

**13. சி.சு.செல்லப்பா தொடங்கிய இதழ்**

அ) தென்றல் ஆ) குயில்
இ) எழுத்து ஈ) கணையாழி

**14. அளவடி என்பதனை ___________ என்றும் கூறுவர்.**

அ) சீரடி ஆ) நேரடி
இ) வரையடி ஈ) நிரையடி

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. பவணந்தி முனிவர் - குறிப்பு வரைக.
16. காவடிச் சிந்து என்பது யாது?
17. அகநானூற்றின் பெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக.
18. அணிலின் கனவாக ஆத்மாநாம் கூறுவது யாது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. பாப்லோ நெரூடா - குறிப்பு வரைக.
20. மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறும் செய்தி யாது?
21. விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தைத் தாகூர் உருவாக்கியதன் நோக்கினைக் குறிப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

22. **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**
    1. தனிமொழி - அறிவு;- வண்ண மயில்; __________ பொதுமொழி - __________
    2. கார்காலம் - __________ குளிர்காலம் - ஐப்பசி, கார்த்திகை; __________ - மார்கழி, தை
23. இயல்பீறு, விதியீறு - புணர்ச்சியை வேறுபடுத்துக.
24. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

    சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.
25. **தொடர் அமைத்து எழுதுக.**

    அன்றொரு நாள், நிழலிலிருந்து

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
அ) அயர்ந்து ஆ) எழுந்த

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**
அ) Shell Seeds ஆ) Weaver Bird

**28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
குரை, குறை

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) திருப்புகழ் ஆ) தாளாற்றி

**30.** ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. சங்க காலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளி வீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.
33. உயர்தமிழை உயிரென்று போற்றுமின்கள் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. பாரதிதாசன் - குறிப்பு வரைக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. தட்சிணமேரு - குறிப்பு வரைக.
36. தாமஸிகம் என்றால் என்ன?
37. தமிழின் கவிதையியல் நூலில் இடம்பெற்றுள்ள கா.சிவதம்பியின் கருத்துகளில் சிலவற்றை எழுதுக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதிவழி எடுத்துக்காட்டுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

The Chinese have no religious science. The practices of their religion (Buddhism) are derived from India. They believe that it is the Indians who brought idols to them and that the latter were their religious educators. In China and in India they believe in metempsychosis. The Chinese and Indians draw from the same religious principles different conclusions. In India medicine and philosophy are practiced. The Chinese practice medicine equally. Their chief treatment is cauterization. The Chinese practice astronomy but the Indians practice this science still more. Written by Abu Zayd Al Sirafi, traveller, 10th century.

– Foreign notices of South India by K.A. Neelakanda Sastri

41. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்" – என்னும் குறட்பாவில் பயின்று வரும் அணியைக் கண்டறிந்து விளக்குக. (அல்லது) சொல் பின்வரு நிலையணி – சான்றுடன் விளக்கம் தருக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

செந்நெலும் கரும்பும் விளைந்தனவே – நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக – தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக
பிரிவுகள் பேசியே பூசலிட்ட – பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் – நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. 'அன்பு' அல்லது 'அறிவு' என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

**(அல்லது)**

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) பௌத்தக் கல்வி, சமணக் கல்வி, மரபுவழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) சிறிகிலிருந்து எனத் தொடங்கும் காவியம் பாடல்

ஆ) 'பொருட்டு' என முடியும் குறள்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
   மலையினும் மாணப் பெரிது.
2. இ) பெருந்தேவனார்
3. இ) நெடுந்தொகை நானூறு
4. ஆ) கூற்றும் – சரி, விளக்கமும் – சரி
5. அ) கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்
6. அ) கீதாஞ்சலி
7. ஆ) தொல்காப்பியம்
8. இ) மூதாதையர்
9. ஈ) மூன்றும் சரி
10. ஈ) உரிச்சொல்தொடர், பண்புத்தொகை
11. ஆ) இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.
12. அ) முதல் இரண்டும் சரி
13. இ) எழுத்து
14. ஆ) நேரடி

### பகுதி - II

15.
- நன்னூலின் ஆசிரியர் பவணந்தி முனிவர் ஆவார்.
- சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் என்று பாயிரம் குறிப்பிடும்.
- இவரது காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு ஆகும்.

16.
- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச்சிந்து எனலாம்.
- முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- அவர்களின் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச் சிந்து என்னும் பாவடிவம் தோன்றியது.

17. அகநானூறு மூன்று பிரிவுகளைக் கொண்டது.
    - களிற்றியானை நிரை - 120 பாடல்கள்
    - மணிமிடைப்பவளம் - 180 பாடல்கள்
    - நித்திலக்கோவை - 100 பாடல்கள்

18. உணவையும் உறக்கத்தையும் தவிர அணிலின் கனவாக எதுவும் இருக்கப்போவதில்லை என்பதே ஆத்மாநாமின் கருத்தாகும்.

19. - பாப்லோ நெரூடா தென் அமெரிக்காவிலுள்ள சிலி நாட்டில் பிறந்தவர்.
    - இலத்தீன் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர்.
    - தன்னுடைய கவிதைகளுக்காக 1971 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்.

20. செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு 'விசித்திர சித்தன்' என்று அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் குடைவரைக் கோவில்களை அமைத்ததாக மண்டகப்பட்டுக் கல்வெட்டு கூறுகின்றது.

21. - குழந்தைகள் இயற்கையின் மடியில் எளிமையாக வளர்க்கப்பட வேண்டும்.
    - தங்கள் வேலையைத் தாங்களே கவனித்துக்கொண்டு, மற்றவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டு 1921இல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார்.

22. 1. தொடர்மொழி, பலகை (பல + கை)
    2. ஆவணி புரட்டாசி, முன்பனி

23. **இயல்பீறு:**
    - இயல்பீறு என்பது இயல்பாக நிற்கும் சொல்லின் வடிவம்
    - பள்ளி + தோழன் பள்ளித்தோழன்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**விதியீறு:**

- விதியீறு என்பது புணர்ந்தபின் நிற்கும் சொல்லின் வடிவம்
- நிலம் + தலைவர் – நில + தலைவர் (விதியீறு) – நிலத்தலைவர்

24. சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.
25. அன்றொரு நாள் கோடையில் வெளியே சென்று கொண்டிருந்த போது சாலையோர மர நிழலிலிருந்து என்னை யாரோ அழைப்பதை உணர்ந்தேன்.
26. அ) அயர்ந்து - அயர் + த்(ந்) + த் + உ

    அயர் - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

    ஆ) எழுந்த - எழு + த்(ந்) + த் + அ

    எழு - பகுதி, த் - சந்தி (ந் ஆனது விகாரம்), த் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி
27. ஒட்டு விதை, தூக்கணாங்குருவி
28. எங்கள் ஊரில் **குரை**க்கும் நாய்களுக்கு **குறை**வில்லை.
29. அ) திருப்புகழ் - திரு + புகழ்

    - இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் எனும் விதிப்படி திருப்புகழ் என்றாயிற்று.

    ஆ) தாளாற்றி - தாள் + ஆற்றி

    - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ள் + ஆ = ளா) தாளாற்றி என்றாயிற்று.
30. ஆசிரியப்பா நான்கு வகைப்படும்.
    - நேரிசை ஆசிரியப்பா
    - நிலைமண்டில ஆசிரியப்பா
    - இணைக்குறள் ஆசிரியப்பா
    - அடிமறிமண்டில ஆசிரியப்பா

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 8

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. ஒப்புரவு என்பதன் பொருள் __________.**

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

**2. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.**

**காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.**

அ) கூற்று சரி; காரணம் தவறு

ஆ) இரண்டும் சரி

இ) இரண்டிற்கும் தொடர்பில்லை

ஈ) கூற்று தவறு; காரணம் சரி

**3. மொழி விளையாட்டின் மூலம் இறைவனின் பெருமை பேசும் செய்யுள் வகை __________**

அ) திருமந்திரம் ஆ) திருப்பாவை

இ) திருச்சாழல் ஈ) திருவருட்பா

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4. ஜாலியன் வாலா பாக் படுகொலையால் மனம் வருந்திய தாகூர் செய்தது ____________.**

அ) சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்

ஆ) ஆங்கில அரசு அளித்த 'சர்' பட்டத்தை திருப்பி அளித்தார்

இ) ஆங்கில அரசைக் கண்டித்து கவிதைநூல் எழுதி வெளியிட்டார்.

ஈ) நாளிதழில் கருத்துப்படம் வெளியிட்டார்.

**5. வாஸ்கோடகாமாவின் நாட்குறிப்புகளைப் பதிவு செய்தவர் ____________.**

அ) சர் தாமஸ் ரோ ஆ) ஆனந்தரங்கர்

இ) ஆல்வாரோ வெல்லோ ஈ) பார்த்தலோமியோடயஸ்

**6. உழவு உலகிற்கு அச்சாணி என்று குறிப்பிட்டவர் ____________.**

அ) திருமூலர் ஆ) திருவள்ளுவர்

இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

**7. தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது ____________.**

அ) பள்ளு ஆ) குறவஞ்சி

இ) கலம்பகம் ஈ) பிள்ளைத்தமிழ்

**8. Idols - என்பதன் தமிழ்ச்சொல்**

அ) சமயம் ஆ) தத்துவம்

இ) சிலைகள் ஈ) அடையாளங்கள்

**9. காந்தள்மலர் என்பதற்கு பொருந்தாததைத் தேர்க.**

**அ) செங்காந்தள் எனவும் அழைக்கப்படும்.**

**ஆ) முல்லை நிலத்தில் மலரும் தன்மையுடையது.**

**இ) குறிஞ்சிப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை, கலித்தொகை ஆகிய இலக்கியங்களில் இம்மலர் பாடு பொருளாக இடம் பெற்றுள்ளது.**

**ஈ) கோடைக்கால மலர்களுள் ஒன்று.**

i) அ, ஆ ii) ஆ, இ

iii) அ,இ iv) ஆ, ஈ

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



10. **'கெடுக'- இலக்கணக்குறிப்பு தருக:**

அ) வேற்றுமைத்தொகை ஆ) வியங்கோள் வினைமுற்று
இ) பண்புத்தொகை ஈ) உவமைத்தொகை

11. **சரியான நிறுத்தக்குறியுடைய தொடரைக் கண்டறிக.**

அ) சிறந்த கலைவிமர்சகர் கவிஞர் மொழி பெயர்ப்பாளர் ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர்

ஆ) ஒரிய மொழிக்கவிஞர் மனோரமா பிஸ்வாஸின் பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம் என்னும் இவரின் மொழிபெயர்ப்பு நூலுக்காக 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்றுள்ளார்

இ) பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே வழிபாடு, செய்தி, பயன்பாடு என்று தமிழில் வழங்கப்படும்.

ஈ) ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள

12. **தண்டுடை - என்னும் சொல்லுக்குரிய விதிகள் __________.**

**i) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**
**ii) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**
**iii) ல, ள வேற்றுமையில் வலிவரின் ற, ட-வும் ஆகும்**

அ) i, ii - சரி ஆ) i, iii - சரி
இ) ii, iii - சரி ஈ) மூன்றும் தவறு

13. **'ஆறாம் திணை' பதிவுச் செய்யும் அவலங்கள் __________.**

**i) தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களின் நிலை**
**ii) தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களின் நிலை**
**iii) குடியாட்சியின் அவல நிலை**
**iv) முடியாட்சியின் அவல நிலை**

அ) முதல் இரண்டும் சரி ஆ) முதல் இரண்டும் தவறு
இ) நான்கும் சரி ஈ) நான்கும் தவறு

14. **கூற்றுகளைப் படித்துக் கீழ்க்காண்பனவற்றுள் சரியானதைத் தேர்க.**

**அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும்போது 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதியைப் பெறும்.**

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) நிலைமொழியின் ஈற்றில் இஈஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் 'ஈறுபோதல்' என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

i) அ, ஆ, இ – சரி, ஈ – தவறு

ii) அ, இ, ஈ – சரி, ஆ – தவறு

iii) அ, ஆ, ஈ – சரி, இ – தவறு

iv) ஆ, இ, ஈ – சரி, அ – தவறு

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. பாயிரம் என்பது யாது?

16. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

17. ஐங்குறுநூறு குறிப்பிடும் மழைக்கால மலர்களைக் குறிப்பிடுக.

18. சிவன் எத்தன்மையன்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

20. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

21. தஞ்சைப் பெரிய கோவில் – பிரமந்திரக்கல் குறித்தெழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

22. **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



23. இறைச்சி என்றால் என்ன?

**24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாகப் பதிய வைக்கனும்.

ஆ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

**25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) நெருங்கின ஆ) இரங்கு

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Myth ஆ) Disaster

**28. சரியான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.**

பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர் என்றும், கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரிசி என்றும் அழைக்கப்பட்ட தாகூர், தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) அரும்பொருள் ஆ) மனையென

30. நிறுத்தற்குறியீடுகளின் வகைகளைக் கூறுக.

## பகுதி - III

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

32. இரவச்சம் குறித்த வள்ளுவரின் கருத்துகளை எடுத்தியம்புக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



33. "கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணியது" – யாது?

34. பொருண்மொழிக் காஞ்சித்துறை – சான்றுடன் விளக்குக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. கூற்று – குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று நினைவுகூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.
கவிதை – கூண்டு திறந்தது
சிறகடிக்கவா?
இல்லை! சீட்டெடுக்க.
கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?

36. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.

37. 1745 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரத் தட்டுப்பாட்டினால் ஏற்பட்ட விளைவுகளைக் கூறுக.

38. திண்ணைப் பள்ளிக் கல்விமுறை பற்றி எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**
    1. The Pen is mightier than the Sword.
    2. Winners don't do different things, they do things differently.
    3. A picture is worth a thousand words.
    4. Work while you work and play while you play.

41. வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)
வேற்றுமை அணியை சான்றுடன் விளக்கி எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக.

**தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு**

| | |
|---|---|
| ஜனவரி - 10,<br>மதுரை.<br>தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும் தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் “பண்பாடுகளால் வாழும் தமிழர்” என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

43. ‘தென்றல்’ அல்லது ‘கல்வி’ என்னும் தலைப்பில் மரபு - புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) நடராசன் தனிமொழிகளிலிருந்து நீங்கள் அறியும் கருத்துக்களை எழுதுக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) கல்லும் கதை சொல்லும் - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராசனின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுக்க.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) உண்டால் அம்ம எனத் தொடங்கும் புறநானூற்று பாடல்

ஆ) ‘இலன்’ என முடியும் குறள்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. இ) ஊருக்கு உதவுவது
2. ஆ) இரண்டும் சரி
3. இ) திருச்சாழல்
4. ஆ) ஆங்கில அரசு அளித்த 'சர்' பட்டத்தை திருப்பி அளித்தார்
5. இ) ஆல்வாரோ வெல்லோ
6. ஆ) திருவள்ளுவர்
7. அ) பள்ளு
8. இ) சிலைகள்
9. iv) ஆ, ஈ
10. ஆ) வியங்கோள் வினைமுற்று
11. இ) பூஜை, விஷயம், உபயோகம் - என்பவை முறையே வழிபாடு, செய்தி. பயன்பாடு என்று தமிழில் வழங்கப்படும்.
12. அ) i, ii – சரி
13. அ) முதல் இரண்டும் சரி
14. ii) அ, இ, ஈ - சரி, ஆ - தவறு

### பகுதி - II

15. நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும் அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைபற்றிப் பேசுவது பாயிரமாகும்.

16.
- குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- கடவுள் வாழ்த்து நீங்கலாக, அகத்திணைச் சார்ந்த 401 பாடல்களை உடையது.
- நல்ல குறுந்தொகை எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது.
- தொகுத்தவர் பூரிக்கோ.
- கடவுள் வாழ்த்துப் பாடியவர் - பாரதம் பாடிய பெருந்தேவனார்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம்.
18. சுடுகாட்டைக் கோயிலாகவும், புலித்தோலை ஆடையாகவும் கொண்ட தலைவனாகிய சிவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை.
19. 
   - தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை
   - இதுவே, இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையாகும்.
20. **உவமை:**

   வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல

   **உவமேயம்:**

   ஜீவானந்தம் இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக் கொள்வார்.

   **பொருள்:**

   ஜீவா மேடை மீது ஏறியதும் இரண்டு கைப்பிடி விஷயங்களுக்கு நெருப்பு வைத்து விடுவார். அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும். பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும். குடைகுடையாய் மாலை மாலையாய் இறங்கி வரும்.
21. 
   - பிரமந்திரக்கல் ஒற்றைக்கல் அன்று.
   - பதின்மூன்று தளங்கள் கொண்டது.
   - கருவறையின் மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக உள்ளது.
22. அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

   ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.
23. இறுத்தல் என்றால் தங்குதல் எனப் பொருள்படும். உரிப்பொருளோடு நேரிடைத் தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சி ஆகும். இறைச்சி அகப்பாடல்களில் மட்டுமே வரும்.
24. அ) ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்கும் போதே எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) தேர்வெழுத வேகமாகச் செல்லுங்கள். நேரங்கழித்துச் சென்றால் பதற்றமாயிருக்கும்.

25. தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

26. அ) நெருங்கின - நெருங்கு + இ(ன்) + அ

நெருங்கு - பகுதி, இ(ன்) - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

ஆ) இரங்கு - இரங்கு + இ

இரங்கு - பகுதி, இ - வினையெச்ச விகுதி

27. அ) தொன்மம் ஆ) பேரழிவு

28. 'பாரம்பரியத்தில் வேரூன்றிய நவீன மனிதர்' என்றும், 'கிழக்கையும் மேற்கையும் இணைத்த தீர்க்கதரசி' என்றும் அழைக்கப்பட்ட தாகூர், தமது 16ஆம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

29. அ) அரும்பொருள் – அருமை + பொருள்

- ஈறுபோதல் எனும் விதிப்படி, மை கெட்டு அரு + பொருள் என்றானது.
- இனமிகல் எனும் விதிப்படி, ம் தோன்றி அரும்பொருள் எனப்புணர்ந்து.

ஆ) மனையென – மனை + என

- இஈஐ வழி யவ்வும் எனும் விதிப்படி, (ஐ க்கு ய வந்து) மனை + ய் + என என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ய் + எ = யெ) மனையென எனப்புணர்ந்தது.

30. 
- பொதுவானவை.
- இணைக்கப்பட வேண்டியவை.
- நிறுத்தற்குறியீடுகள் தொடர்பானவை.
- இடைவெளி தர வேண்டியவை.
- எழுத்து வடிவம் என ஐந்து வகைப்படும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 9

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

**கொடி தவித்ததைப் பாரி**
**அறிந்துகொண்டான்**
**மயில் தவித்ததைப் பேகன்**
**உணர்ந்து கொண்டான்**
**பிள்ளையின் பரிதவிப்பைத்**
**தாய் அறிவாள்**
**பளிங்கு முகத்தைப் படித்துக்கொள்**
**அப்படிப் படித்தவர்களைப்**
**பிடித்துக் கொள்.**

அ) இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்

இ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**2. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?**

அ) மொழிபெயர்ப்பாளர்

ஆ) இந்தியாவின் பெப்பிசு

இ) தலைமைத் துவிபாஷி

ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

**3. தானமும் ஒழுக்கமும் தவமும் ஈகையும்**
**மானமும் பூத்ததிண் மறனும் வெற்றியும்**
**இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்களைக் கண்டறி.**

அ) எதுகை, இயைபு ஆ) எதுகை, மோனை

இ) மோனை, முரண் ஈ) அந்தாதி, உவமை

**4. களைத்துப் போன உம் கத்திரிக்கோலால் காலத்தை வெட்ட முடியாது என்று குறிப்பிட்டவர் ________.**

அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே

இ) பாப்லோ நெரூடா ஈ) எர்னஸ்ட் காசிரர்

**5. சரியான கூற்றினைக் கண்டறி.**

**i) கோபுரமென்பது வாயில்களின் மேலே அமைக்கப்படுவது**

**ii) விமானம் அகநாழிகையின் மேல் அமைக்கப்படுவது**

**iii) கருவறையைத்தான் அகநாழிகை என்று அழைப்பார்கள்**

அ) முதல் இரண்டும் சரி ஆ) மூன்றும் சரி

இ) கடைசி இரண்டும் சரி ஈ) முதல் மட்டும் சரி

**6. 'ரத்னாபாயின் ஆங்கிலம்' என்பது சுந்தர ராமசாமியின் ________.**

அ) புதினம் ஆ) மொழிபெயர்ப்புக்கதை

இ) சிறுகதை ஈ) கட்டுரை

**7. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்.**

அ) மூதூர் ஆ) வெற்றிடம்

இ) நல்லாடை ஈ) பைந்தளிர்

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



8. **பொருத்திக்காட்டுக.**

i) Typhoid - **1. விடைச்சுவடி**
ii) Ointment - **2. எழுதுசுவடி**
iii) Notebook - **3. களிம்பு**
iv) Answer Book - **4. குடற்காய்ச்சல்**

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 2, 1
இ) 1, 2, 4, 3 ஈ) 4, 2, 1, 3

9. **பிழையானத் தொடரைக் கண்டறிக**

அ) கரும்பலகையில் எழுதிப் பாடம் நடத்துவது மாணவர்களை விழிப்படையச் செய்யும்.
ஆ) மாணவர்கள் பள்ளிக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும்.
இ) வேலையின்மையைப் போக்க நல்ல வேலைத் தேட வேண்டும்.
ஈ) நுண்கலைகள் சிந்தனையைத் தூண்டும்.

10. **நெறு நெறு ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு**

அ) அடுக்குத்தொடர் ஆ) வினைத்தொகை
இ) வினையெச்சம் ஈ) இரட்டைக்கிளவி

11. **சரியான நிறுத்தற் குறியீடு உள்ள தொடரைக் கண்டறிக.**

அ) "மறைமலையடிகள் மரணத்தின் பின் மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்".
ஆ) 'மறைமலையடிகள் மரணத்தின்பின்', மனிதர்நிலை என்னும் நூலை இயற்றினார்.
இ) "மறைமடியடிகள் மரணத்தின்பின் மனிதர்நிலை" என்னும் நூலை இயற்றினார்.
ஈ) மறைமலையடிகள், 'மரணத்தின்பின் மனிதர்நிலை' என்னும் நூலை இயற்றினார்.

12. **இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் என்னும் விதிக்குரிய சொல் __________**

அ) திருப்புகழ் ஆ) உயர்ந்தோங்கும்
இ) ஏழிசை ஈ) நெகிழ்ந்துருக

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**13. தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர் ________.**

அ) டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி

ஆ) டாக்டர் கி. கிருஷ்ணமூர்த்தி

இ) ஜெயமோகன்

ஈ) ஜெயகாந்தன்

**14. மெய்ப்புத் திருத்தக் குறயீடுகளுக்கு பொருந்தாத தொடரைக் கண்டறிக.**

அ) அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்கும் குறியீடு - Dt

ஆ) பத்திகளுக்கிடையில், வரிகளுக்கிடையில், சொற்களுக்கிடையில் இடைவெளி தருவதற்கான குறியீடு - 

இ) சொற்களை அல்லது எழுத்துக்களைச் சேர்க்கவும். இடைவெளி விட வேண்டாம் என்பதற்கான குறியீடு - ⁀‿

ஈ) சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க என்பதற்கான குறியீடு - ^

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

16. வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்
மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

17. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண் படின் - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

18. ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4**

19. குறியீட்டுக் கவிதை - வரையறு.

20. ஆனந்தரங்கர் குறிப்பிடும் வராகன்களை எழுதுக.

21. நெல்லுக்குச் சிறந்த ஊடுபயிர் எது? காரணம் தருக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7×2=14**

**22. மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

அ) முதலைக் கண்ணீர் ஆ) குறைகுடம் கூத்தாடும்

**23.** ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?

**24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

கடலை மலையாகவும், மலையை கடலாகவும் மாற்றும் இச்சிறு வாய்காலும் அதில் செல்லும் நீரும்

இயற்கையை புரட்டி போடும் ஆற்றலும் உறுதியும் கொண்டது.

**25. பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

அ) டயாபெட்டிக் பேஷண்ட், ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.

ஆ) ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) வைத்தார் ஆ) நின்ற

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Smartphone ஆ) Touch screen

**28. பொருள் வேறுபாடறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அலகு, அழகு, அளகு

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) உலகனைத்தும் ஆ) திருவடி

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



30. கலைச்சொல்லாக்கப் பணிகள் தொடங்குவதற்கு உரிய விதிமுறைகள் யாவை?

**பகுதி - III**

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. "மறுவிலாத அரசென இருந்த மாநகர்" - உவமையைப் பொருளுடன் விளக்குக.

32. புறநானூறு - குறிப்பு வரைக.

34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

35. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.

36. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

37. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

38. ஜீவாவின் கொள்கையையும் நம்பிக்கையையும் குறித்து சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×4=12**

39. "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. தமிழாக்கம் செய்க.

    1. Education is the most powerful weapon, which you can use to change the world.
    2. Looking at beauty in the world is the first step of purifying the mind.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3. Culture does not make people. People. People make culture.
4. A people without the knowledge of their past history and culture is like a tree without roots.

41. உவமையணி அல்லது சொற்பொருள் பின்வருநிலையணியை சான்று தந்து விளக்குக.

42. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக் கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனையும் எழுதுக.

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ. – கம்பர்

43. 'அருவி' அல்லது 'வெண்ணிலா' என்னும் தலைப்பில் மரபு – புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

Padasalai

**பகுதி - IV**

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3×6=18**

44. அ) யுகத்தின் பாடல் வழியாக சு.வில்வரத்தினம் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் விளக்குக.

**(அல்லது)**

ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சுந்தர ராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



46. அ) தமிழர் வாழ்வோடு புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×6(4+2)=6**

அ) 'என் அம்மை ஒற்றியெடுத்த' எனத் தொடங்கும் யுகத்தின் பாடல்.

ஆ) 'வடு' என முடியும் குறள்.

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. ஆ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள் யாது கொடுத்தும் கொளல்
2. ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
3. அ) எதுகை, இயைபு
4. அ) வால்ட் விட்மன்
5. ஆ) மூன்றும் சரி
6. இ) சிறுகதை
7. இ) நல்லாடை
8. அ) 4, 3, 2, 1
9. இ) வேலையின்மையைப் போக்க நல்ல வேலைத் தேட வேண்டும்.
10. ஈ) இரட்டைக்கிளவி
11. ஈ) மறைமலையடிகள், 'மரணத்தின்பின் மனிதர்நிலை' என்னும் நூலை இயற்றினார்.
12. அ) திருப்புகழ்
13. அ) டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி
14. ஆ) பத்திகளுக்கிடையில், வரிகளுக்கிடையில், சொற்களுக்கிடையில் இடைவெளி தருவதற்கான குறியீடு - 

### பகுதி - II

15.
- மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன்மாடங்கள் உயர்ந்திருந்தன.
- அங்காடித் தொருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடல் ஒலி போன்று இருந்தது.
- மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப் போன்று பரந்திருந்தன.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- மதீனாவில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

16. • நூல் – திருமலை முருகன் பள்ளு, தென்கரை நாடு.
- ஆசிரியர் – பெரியவன் கவிராயர்.
- தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக்கூட்டங்கள் தங்கிச் செல்லும்.

17. **உவமை** : தன் எல்லா உறுப்புகளையும் (பாகங்கள்) மருந்தாகத் தரும் மரம்.

**உவமேயம்** : பெருந்தகையானிடம் உள்ள செல்வம்.

**பொருத்தம்** : பெருந்தகையானிடம் உள்ள செல்வமானது, தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

18. நடராசன் நாங்கூழ்ப் புழுவை நோக்கி, மண்ணைப் பக்குவப்படுத்தி பயிர் விளைவிக்கின்றாய். இவ்வுதவியை எண்ணாமல் எறும்பு முதலிய பூச்சிகள் கடிக்கின்றன. அதிலும் பொறுமை காக்கிறாய்.

19. • குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று.
- நினைவு கூரத்தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்

20. • புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன் பரங்கிப்பேட்டை வராகன், ஆரணி வராகன்

21. • உளுந்து நெல்லுக்குச் சிறந்த ஊடுபயிராகும்.
- உளுந்தை அறுவடை செய்தபின், அதன் வேர் முடிச்சுகளில் இருக்கும் நைட்ரஜன், நிலத்தின் வளத்தைப் பெருக்கி அடுத்த விளைச்சலை அதிகரிக்கச் செய்யும்.

22. அ) பொய் அழுகை

தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு முதலைக்கண்ணீர் வடிக்க வேண்டாம்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) படிப்பறிவு இல்லாதவர்கள் இடம் பொருள் என்று பாராமல் நினைத்ததை உடனே குறைகுடம் ஒலி எழுப்புவது போல உடனே பேசிவிடுவார்கள். படித்த சான்றோர்கள் இடத்திற்கு ஏற்றார்போல் நிதானமாகப் பேசுவார்கள்.

23. ஈரசைச் சீர்கள் நான்கு வகைப்படும்.

- தேமா, புளிமா ஆகிய இரண்டும் நேரீற்று ஈரசைச் சீர்.
- கருவிளம், கூவிளம் இரண்டும் நிரையீற்று ஈரசைச் சீர்.
- இந்நான்கு இயற்சீர்களும் ஆசிரிய உரிச்சீர்கள் ஆகும்.

24. கடலை மலையாகவும், மலையைக் கடலாகவும் மாற்றும் இச்சிறு வாய்க்காலும் அதில் செல்லும் நீரும் இயற்கையைப் புரட்டிப் போடும் ஆற்றலும் உறுதியும் கொண்டது.

25. அ) சர்க்கரை (நீரிழிவு) நோயாளி, இனிப்பு உண்பதை நிறுத்த வேண்டும்.

ஆ) ஒல்லியாக இருப்பதே அழகு என்ற எண்ணம் பரவி வருகிறது.

26. அ) வைத்தார் - வை + த் + த் + ஆர்

வை - பகுதி, த் – சந்தி, த - இறந்தகால இடைநிலை,
ஆர் - பலர்பால் வினைமுற்று

ஆ) நின்ற - நில்(ன்) + ற் + அ

நில்(ன்) - பகுதி, (ல், ன் ஆனது விகாரம்),
ற் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்ச விகுதி

27. அ) திறன்பேசி ஆ) தொடுதிரை

28. அலகு - பறவை மூக்கு - பறவைகளின் அலகுகள் உறுதியானவை.

அழகு - வனப்பு - ஆண்மயிலுக்கு, அழகு சேர்ப்பது தோகை.

அளகு - பெண்பறவை - மயில்களில், அளகு (பெண்) இனத்திற்குத் தோகை கிடையாது.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



29. அ) உலகனைத்தும் - உலகு + அனைத்தும்

- உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் எனும் விதிப்படி, உலக் + அனைத்தும் என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (க் + அ = க) உலகனைத்தும் எனப்புணர்ந்தது.

ஆ) திருவடி - திரு + அடி

- ஏனை உயிர்வரின் வவ்வும் எனும் விதிப்படி, திரு + வ் + அடி என்றானது.
- உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (வ + அ = வ) திருவடி எனப்புணர்ந்தது.

30
- ஆக்கப் பெறும் சொல் தமிழ்ச் சொல்லாக இருத்தல் வேண்டும்.
- பொருள் பொருத்தமுடையதாக, அதே நேரத்தில் செயலைக் குறிப்பதாக அமைதல் வேண்டும்.
- வடிவில் சிறியதாக, எளிமையாக இருத்தல் வேண்டும். ஓசை நயமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தமிழ் இலக்கண மரபுக்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாதிரி வினாத்தாள் - 10

## பொதுத்தமிழ்

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

### பகுதி - I

குறிப்பு:

i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **14×1=14**

ii) கொடுக்கப்பட்ட நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெள்ளிவீதியார் | - | அ) புறநானூறு |
| 2. | அண்ணாமலையார் | - | ஆ) சி. சு. செல்லப்பா |
| 3. | வாடிவாசல் | - | இ) குறுந்தொகை |
| 4. | இளம்பெருவழுதி | - | ஈ) காவடிச்சிந்து |

i) அ, ஆ, இ, ஈ ii) ஆ, ஈ, அ, இ
iii) இ, ஈ, ஆ, அ iv) இ, ஈ, அ, ஆ

**2. விரைந்து கெடுபவன் யார்?**

அ) பிறருடன் ஒத்துப்போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3. **பில்கணியத்தைத் தழுவி பாரதிதாசனால் எழுதப்பட்ட நூல் ________.**

அ) இருண்ட வீடு ஆ) குடும்ப விளக்கு

இ) அழகின் சிரிப்பு ஈ) புரட்சிக்கவி

4. **கூற்று 1 : தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்.**

**கூற்று 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃபிரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.**

அ) கூற்று 1 - சரி, கூற்று 2 - தவறு

ஆ) கூற்று இரண்டும் தவறு

இ) கூற்று 1 - தவறு, கூற்று 2 - சரி

ஈ) கூற்று இரண்டும் சரி

5. **சரியானதைத் தேர்ந்தெடுக்க.**

**அ) வரை - மலை**

**ஆ) வதுவை - திருமணம்**

**இ) வாரணம் - யானை**

**ஈ) புடவி - கடல்**

i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு ii) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு

iii) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு iv) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

6. **புல்லின் இதழ்கள் என்னும் புகழ் பெற்ற நூலின் ஆசிரியர் ________.**

அ) வால்ட் விட்மன் ஆ) மல்லார்மே

இ) பாப்லோ நெருடா ஈ) எர்னஸ்ட் காசிரர்

7. **சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது ________**

அ) உடனிலை மெய்ம்மயக்கம்

ஆ) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

இ) ஈரொற்று மெய்ம்மயக்கம்

ஈ) இவற்றில் எதுவுமில்லை

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



8. **'Circular' என்பதன் பொருள் ________.**

அ) சுற்றறிக்கை ஆ) அறிக்கை

இ) ஆவணம் ஈ) நல்கை

9. **உவமையின் அடிப்படையைப் பொருத்திக் காட்டுக.**

**i) புலி போலப் பாய்ந்தான் - 1. நிறம்**

**ii) மழை போலக் கொடுக்கும் கை - 2. வடிவம்**

**iii) துடி போலும் இடை - 3. பயன்**

**iv) தளிர் போலும் மேனி - 4. தொழில்**

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 2, 1

இ) 3, 2, 4, 1 ஈ) 4, 2, 3, 1

10. **'அறிவும் ஒழுக்கமும்'- இலக்கணக்குறிப்பு தருக:**

அ) வேற்றுமைத்தொகை ஆ) வினைத்தொகை

இ) எண்ணும்மை ஈ) உவமைத்தொகை

11. **நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது**

அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை

இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

12. **இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதபமிகும் என்னும் விதிக்குரிய சொல் ________.**

அ) தற்சிறப்பு ஆ) பொதுச்சிறப்பு

இ) புன்சிறப்பு ஈ) புனைந்துரை

13. **செல்லம்மா என்ற புனைபெயரிலும் எழுதியவர் ________.**

அ) பாரதியார் ஆ) சி.சு. செல்லப்பா

இ) கண்ணதாசன் ஈ) பாரதிதாசன்

14. **ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் பொருந்தாததை எழுதுக.**

அ) செப்பலோசை கொண்டது.

ஆ) எல்லா அடிகளும் நான்கு சீர்களைப் (அளவடி) பெற்று வரும்.

இ) இயற்சீர் மிகுந்தும் பிறசீர் கலந்தும் வரும்.

ஈ) ஆசிரியத்தளை மிகுந்தும் பிறதளை கலந்தும் வரும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக.**

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×2=6

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

16. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

17. பகைவர் வலிமையற்று இருக்கும்போதே வென்றுவிட வேண்டும் என்னும் குறட்பாவைக் (பொருள்) கூறுக.

18. கற்றேன் என்பாய் கற்றாயா என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×2=4

19. பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

20. சாமுவேல் பெப்பிசு - குறிப்பு வரைக.

21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7×2=14

**22. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

அ) எட்டு ஆ) வைகை

23. உவமை, உருவகம் - வேறுபடுத்துக.

**24. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

பட்டினிகுரத்தி என்னும் சமணபெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணபள்ளி ஒன்றை நிறுவினார்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**25. விடைக்கேற்ற வினாவை எழுதுக.**

அ) புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது.

ஆ) 8.6.1746 ஆம் நாள் லெபூர்தொனேவின் ஒன்பது கப்பல்கள் வந்தன.

**26. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) மெலிந்து ஆ) விடுத்தல்

**27. கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.**

அ) Organic Farming ஆ) Invasion

**28. பழமொழிகளை அறிந்து தொடரமைக்க.**

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) எதிரொலி ஆ) பேரழகு

**30.** இணைக்குறள் ஆசிரியப்பா - வரையறு.

**பகுதி - III**

**ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை தருக.**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×4=8**

31. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக

32. தமிழகப் பெண்கள் பாடிக் கொண்டே விளையாடும்போது வெளிப்படுத்தும் மேன்மையான கருத்துகளாகத் திருச்சாழல் உணர்த்துவன யாவை?

33. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா-விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.

34. மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36. சமணப் பள்ளிகளும், பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

37. கலைச் சொல்லாக்கத்திற்கும் - அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?

38. இயற்கையுடன் உரையாடல் ஒன்றைக் கற்பனையாகப் பத்துவரிகளில் எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. 'பணம் பத்தும் செய்யும்' என்னும் பழமொழியை ஏதேனும் வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

40. **தமிழாக்கம் செய்க.**

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and again!

41. உவமை அணிக்குத் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

**(அல்லது)**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து
-இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**42. கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

கல்வி என்றால் என்ன? அது நூல்களைப் படிப்பதா? அல்லது அது பலவகையானதைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மனத்தின் ஆற்றலும் அது வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும். அக்கல்வி வளர்ச்சிக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தும். பயிற்சி. கல்வியின் நோக்கம் செய்திகளைப் பற்றிய அறிவைச் சேமிப்பதன்று. கல்வியின் நோக்கமே மனத்தை ஒருமுகப்படுத்துவதுதான். மனவொருமைப்பாடே கல்வியின் அடிப்படை.

எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தும் அளவுக்கு அறிவும் வளரும். இயற்கையால் மூடப்பட்டிருக்கும் அறிவுச்சுடரைத் திறப்பதற்கு இதுவொன்றே சிறந்த வழியாகும். மனிதன் தன் சக்தியை நூ ற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு வீண் செய்து விடுகிறான். இதனால்தான், அவன் அடிக்கடி தவறுகள் செய்கிறான். பண்புடைய மனத்தைப் பெற்றவன் ஒரு தவற்றையும் செய்ய மாட்டான்.

மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள முக்கிய வேறுபாடு மனத்தை ஒருமுகப்படுத்துவதில்தான் இருக்கிறது. எத்துறையிலும் வெற்றி பெறுவது. இதைப் பொறுத்துத்தான் அமைகிறது. இசை, ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளிலும் சிறப்பாகத் தேர்ச்சி பெறச் செய்வது மன ஒருமைப்பாடுதான். மேலும், உலகத்தின் புதிர்களை மூடி வைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நாம் பெற வேண்டும். இவ்வலிமையை நமக்கு அளிக்கக்கூடியது மன ஒருமைப்பாடுதான். அதுவே கல்விக்கு அடிப்படையாகும். (கல்வி – சுவாமி விவேகானந்தர்)

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



43. 'மரம் வளர்ப்போம்' அல்லது 'உழைப்பு' என்னும் தலைப்பில் மரபு – புதுக்கவிதை ஒன்றை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

## பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3×6=18

44. அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் – இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

**(அல்லது)**

பாரதிதாசன் ஒரு 'புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45. பேச்சுமொழியைக் கவிதைகளில் பயன்படுத்துபவர்களின் வகைகளை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுப்படுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

**அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 1×6(4+2)=6

1. அ) 'அம்ம வாழி' எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல்.

ஆ) 'பெரிது' என முடியும் குறள்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## விடைக் குறிப்புகள்

### பகுதி - I

1. iii) இ, ஈ, ஆ, அ
2. ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்.
3. ஈ) புரட்சிக்கவி
4. ஈ) கூற்று இரண்டும் சரி
5. i) அ, ஆ, இ - சரி; ஈ - தவறு
6. அ) வால்ட் விட்மன்
7. ஆ) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்
8. அ) சுற்றறிக்கை
9. அ) 4, 3, 2, 1
10. இ) எண்ணும்மை
11. ஈ) நிரை முன் நேர்
12. ஆ) பொதுச்சிறப்பு
13. அ) பாரதியார்
14. அ) செப்பலோசை கொண்டது.
15. 
   - மரங்கள் வெட்டப்பட்டன.
   - வான்மழை பொய்த்தது.
   - மண்வளம் குன்றியது.
   - குருவிகள் கூடுகட்டி வாழ மரங்கள் இல்லை.
   - வாழ ஏதுமின்மையால் ஏதிலியாய்க் குருவிகள் எங்கேயோ பறந்து சென்றுவிட்டன.
16. 
   - எண்ணச் சொல்பவர்கள் - ஆசிரியர்கள்.
   - எண்ணுபவர்கள் - மாணவர்கள்.
17. **குறட்பா :**

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பொருள் :**

சிறியதாக இருக்கையிலே முள்மரத்தைக் களைந்துவிடுவது - போல பகைவர் வலிமையற்று இருக்கும் போது வென்றுவிட வேண்டும்.

18. • கற்றேன் என்பாய் கற்றாயா என்று அப்துல் ரகுமான் அறியாமை என்னும் மாயையில் வாழ்கின்ற மக்களைப் பார்த்துக் கேட்கிறார்.

• வெறும் காகிதத்தைப் படிப்பது மட்டும் கல்வியாகாது என்கிறார்.

19. • எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.

• எழுத்துமொழி - எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது.

• பேச்சுமொழி - முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

• அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்திமிக்கதாக உள்ளது.

20. • உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் சாமுவேல் பெப்பிசு ஆவார்.

• ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் இரண்டாம் சார்லஸ் மன்னர் காலத்து நிகழ்வுகளை நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார்.

21. • நாட்டுப்புறம் நாட்டுப்புறங்களில் இருக்கும்போது எல்லாவற்றையும் விழுங்கவல்ல மாபெரும் இயற்கையே சிறந்து விளங்குகின்றது.

• பட்டணம் பட்டணங்களில் மனித சமுதாயம்தான் முக்கியமானதாகத் தலைதூக்கி நின்று, மனிதனின் கொடூரத்தன்மை வெளிப்படுகிறது.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



22. அ) எள்துவரை : புன்செய் நிலங்களில் எள் துவரை விளைவிக்கப்படும்.

எட்டும்வரை : நம் இலக்கினை எட்டும் வரை முயன்று கொண்டே இருக்க வேண்டும்.

ஆ) வைகை : வைகை என்னும் பொய்யாக் குலக்கொடி என்பார் இளங்கோவடிகள்.

வை கை : அன்னத்தில் வை கை என்றாள் அன்னை.

23. உவமை ஒன்றை மற்றொன்றோடு ஒப்புமை தோன்றக் கூறுவது உவமையாகும். உவமை முன்னரும் உவமேயம் பின்னரும் வரும். **எ.கா:** மலர்க்கண்.

உருவகம் உவமையினையும், உவமேயத்தையும் வேறுபடுத்தாமல் ஒன்றே எனக் கூறுதல் உருவகமாகும். உவமேயம் முன்னரும் உவமை பின்னரும் வரும். எ.கா: கண்மலர்.

24. பட்டினிக்குரத்தி என்னும் சமணப்பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளி ஒன்றை நிறுவினார்.

Padasalai

25. அ) புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமை யாரிடம் இருந்து பெறப்பெற்றது?

ஆ) எந்த ஆண்டு எங்கிருந்து ஒன்பது கப்பல்கள் வந்தன?

26. மெலிந்து = மெலி + த்(ந்) + த் + உ

மெலி - பகுதி, த்(ந்) - சந்தி; த்-ந், ஆனது விகாரம்,
த் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி

விடுத்தல் = விடு + த் + தல்

விடு - பகுதி, த் - சந்தி, தல் - தொழிற்பெயர் விகுதி

27. அ) இயற்கை வேளாண்மை ஆ) மதிப்புக்கூட்டுப் பொருள்

28. நெல்மணியைப் பதர் நெல்லிலிருந்து பிரிக்க காற்று அடிக்கும்போதே தூற்றிப் பிரிக்க வேண்டும். அதுபோல ஒரு செயலை சரியான (உகந்த) காலத்திலேயே செய்து முடிக்கவேண்டும்.

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



29. அ) எதிரொலி = எதிர் + ஒலி

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி, (ர் + ஒ = ரொ) எதிரொலி எனப்புணர்ந்தது.

ஆ) பேரழகு = பெருமை + அழகு

- ஈறுபோதல் எனும் விதிப்படி, மை கெட்டு பெரு + அழகு என்றானது.
- ஆதி நீடல் எனும் விதிப்படி, பெரு - பேரு என்றாகி, பேரு + அழகு என்றானது.
- இணையவும் எனும் விதிப்படி, உகரம் கெட்டு பேர் + அழகு என்றானது.
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி (ர் + அ = ர) பேரழகு எனப்புணர்ந்தது.

30. முதலடியும் இறுதியடியும் நான்கு சீர்களைப் பெற்று இடையடிகள் இணை இணையாய் இருசீர்களாகவும் (குறளடி) மூன்று சீர்களாகவும் (சிந்தடி) வருவது இணைக்குறள் ஆசிரியப்பாவாகும்.

☯☯☯☯☯

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



குறிப்புகள்

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



குறிப்புகள்

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



குறிப்புகள்

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma

www.Padasalai.Net www.TrbTnpsc.com



குறிப்புகள்

☯☯☯☯☯

Padasalai

Send Your Study Materials & Answer Keys to Our Email ID - padasalai.net@gma